விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 22 வியாழக்கிழமை (08.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மன்னிப்புச்சபையின் அறிக்கைக்கு பதிலளிக்க அரசாங்கம் இணக்கம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைக் கண்டித்து சர்வதேச மன்னிப்பு சபை நேற்று வெளியிட்ட அறிக்கைக்கு உரிய நேரத்தில் உரிய விதத்தில் நாம்பதிலளிப்போம் என வெளி விவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## அத்தநாயக்கவுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவை தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ள அநாமதேய நபர் ஒருவர், ஒரு சிலர் அத்தநாயக்கவை கொலை செய்ய முயல்வதாகவும் அதனால் கவனமாக இருக்கும்படி எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினால் நால்வருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பொது பட்டமளிப்பு விழாவில் நான்கு பேருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்க பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் திருமதி ஆர். மகேஸ்வரன், வைத்திய கலாநிதி எஸ்.ஆனந்தராஜா, செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகிய நால்வருக்கும் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்க யாழ். பல்கலைக்கழக மூதவை, பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ரஷ்ய விமான விபத்தில் 43 பேர் உயிரிழப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவில் நேற்று இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 43 பேர் பலியாகியுள்ளனர். மொஸ்கோவிலிருந்து 250 கிலோ மீற்றர் தொலையிலுள்ள யாரோஸ்லோவ்ல் நகரிலுள்ள விமான நிலையத்திலிருந்து இவ் விமானம் புறப்பட்டு சிறிது நேரத்தில் விபத்துக் (20ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி இறுதி யுத்தத்தின் போது தோல்வியில் முடிபடைந்த அமெரிக்காவின் முயற்சிகள்

(கொழும்பு)

போரின் இறுதிக்கட்டத்தில் பொது மக்களின் இழப்புக்களை தவிர்ப்பதற்காக எஞ்சியுள்ள பேராளிகள் சரணடைவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடு நிலையாளர் ஒருவரை ஏற்க வைப்பதற்கு அமெரிக்கா மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

2009 மே 17ஆம் நாள் இலங்கைக்காண அப்போதைய அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய தகவல் பரிமாற்றுக் குறிப்பு ஒன்றிலேயே இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் நிலைமை தொடர்பாக அனுப்பப்பட்ட (19ஆம் பக்கம் பார்க்க)

## இன்னர் சிற்றியிடம் சிக்கிய இலங்கை இராஜதந்திரிகள்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு தயாரித்த ஆவணப் படம் ஐக்கிய நாடுகள் சபையின் வளாகத்தில் நேற்று முன்தினம் காட்சிப்படுத்தப்பட்ட போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் அரசாங்கத்தின் இராஜதந்தரிகள் திண்டாடியுள்ளனர்.

சனல் 4 தொலைக்காட்சியின் இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படத்திற்குப் போட்டியாக இந்த ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித்த கோஹனவும், பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் பதிலளித்துள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடைய முன்வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் (19ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம மனிதர்களுக்கு எதிராக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

மர்ம மனிதன் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களின் மீது மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகளை உடன் நிறுத்த வேண்டும் எனவலியுறுத்தி யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று பல்கலைக் கழக வளாகத்திற்குள்ஒன்றுகூடிகண்டனத்தைவெளிப்படுத்தினர்.

நேற்று முற்பகல் 11.30 மணி தொடக்கம் 12.30 வரை இந்த ஒன்றுகூடல் இடம் பெற்றது.

மாணவர்கள் அனைவரும் தமது கண்டனங்களை தெரிவித்ததோடு அரசுக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் கையில் ஏந்தி நின்றனர்.

இந்த ஒன்றுகூடலின் போது மாணவர்களினால் கண்டன அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொடிய போர் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டு அதன் சுமைகள் தாங்கமுடியாமல் தாங்கி, (20ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள்-காவலர்கள் வவுனியாவில் மோதல்

(வவுனியா)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கும் சிறைக்காவலர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக பலர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சிறைக்காவலர் ஒருவரும் அவரின் உதவியாளரும்3 கைதிகளும் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவைத்தியசாலைவட்டாரங்கள்தெரிவித்தன.

வவுனியா சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கான தண்ணீர் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டமை தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து இம்மோதல் ஏற்பட்டதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்து வவுனியா சிறைச்சாலை அதிகாரி ராஜகருண அனுராதபுர சிறைச்சாலை. (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மெனிக்பாம் முகாம் போல் எங்குமே பார்த்ததில்லை!

## பான் கீ மூன் சொன்னதாக விக்கிலீக்ஸ் தகவல்



வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் முழு அழிவுகளையும் தான் பார்வையிட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இராஜதந்திரிகளுக்கு கூறியிருந்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன், தான் பார்வையிட்டதில் மெனிக்பாம் அகதிகள் முகாமின் நிலை சூடானின் தார்பூர் முகாம்களின் நிலையை விட மிகவும் மோசமானதாக இருந்ததாக பான் கீ மூன் இராஜதந்திரிகளுக்கு குறிப்பிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

2009-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி இரவு பான் கீ மூன் இலங்கைக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்ப என கொழும்பு விமான நிலையத்துக்கு சென்றபோது இலங்கைக்கான நிவாரண தூதுக்குழுவின் இணைத் தலைவருடனேயே இக்கருத்துகளை பகிர்ந்து கொண்டுள்ளார்.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் ஆர்மூர் என்பவரால் 2009-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் மெனிக்பாம் விஜயம் குறித்து நோர்வேத் தூதுவர் கேட்டபோது, அதுவொரு துன்பகரமான விஜயம் என பான் கீ மூன் கூறியுள்ளார். அத்துடன் மெனிக்பாம் முகாமில் போரினால் இடம்பெயர்ந்த 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருப்பதாகவும் அம்மக்களுக்கு ஊட்டச் சத்துக் குறைபாடு காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின் பின் பான் கீ மூன் மேற்கொண்ட இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமஉள்ளிட்ட உயர்மட்ட அரசதரப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட மக்கள் போதுமான தங்குமிட வசதிகள் இல்லாமலும் நிழலுக்கு கூட மரங்கள் இல்லாத நிலையிலும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என பா கீ மூன் கூறியுள்ளார் என இத்தகவல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது. (எ-1)

## அடையாள ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களாகிய நாம் இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரி சட்டபூர்வமாக்கப்படுவதை கண்டித்து அடையாள ஆர்ப்பாட்டமொன்றை இன்று எமது பல்கலைக்கழக மருத்துவ பீட நுழைவாயிலில் ஏற்பாடு செய்திருந்தோம்.

எனினும் அரச வைத்தியர்கள் சங்கம் (GMOA) மேற்கொண்ட சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப்பட்ட இணக்கங்களுக்கமைய அவர்கள் தாம் ஏற்பாடு செய்திருந்த அடையாள பணிப்பகிஷ்கரிப்பை கைவிட்டதைத் தொடர்ந்து நாமும் எமது அடையாள ஆர்ப்பாட்டம் தேவையற்றது எனக்கருதி ஆர்ப்பாட்டத்தைகைவிடுவதாக தீர்மானித்ததாக பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ச)

## ஆய்வு நூல் அறிமுக விழா

ஆர்.எஸ்.நடராசா எழுதிய சேர் பொன்.இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் ஆய்வு நூல் அறிமுக விழா எதிர்வரும் 17-ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துமா மன்ற அரங்கில் நடைபெறும்.

துர்க்கா துரந்தரர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி தம்பதியினர் கலந்து கொள்கின்றனர். சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்கிறார். (எ)

## கும்பாபிஷேகம்

திருநெல்வேலி திருவருள்மிகு ஸ்ரீநீலாயதாஷி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமி தேவஸ்தான கும்பாபிஷேகம் இன்று 8-ம் திகதி வியாழக்கிழமை காலை 9.45 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள சுபவேளையில் இடம் பெறவுள்ளது. அடியார்கள் தங்களால் இயன்ற நிதி, பொருள் உதவிகளை வாரி வழங்கி உதவுமாறு வேண்டப்படுகின்றது. (ச-9)

## போலித் துப்பாக்கியைக் காட்டி இராணுவத்தை மிரட்டிய மூவர் நேற்று கைதாகினர்

செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் வாங்கிய விளையாட்டுத் துப்பாக்கியை இராணுவத்தினர் மீது காட்டி அச்சுறுத்திய மூவர் நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு சென்றுவிட்டு கோயிலில் வாங்கிய விளையாட்டுத் துப்பாக்கியை இராணுவத்தினர் மீது காட்டி அச்சுறுத்தியதாக 3 இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்தனர்.

புறாப்பொறுக்கி இராணுவ மினி முகாமில் கடமையாற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினரை துப்பாக்கி காட்டி அச்சுறுத்திய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இம்மூன்று இளைஞர்களும் புறாப்பொறுக்கியைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்தது. குறித்த மூவரும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ச-9,24)

## சகல மாவட்டங்களிலும் இராணுவம் கடமையில்!

### ஜனாதிபதி உத்தரவு

நாட்டின் சகல நிர்வாக மாவட்டங்களிலும் இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக பிரபல சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு காணப்படும் விசேட அதிகாரங்களின் அடிப்படையில் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 12-ம் சரத்தின் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடிதம் ஊடாக இந்த அறிவிப்பினை நாடாளுமன்றிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதன்மூலம், பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் மக்கள் கலகங்களின் போது இராணுவத்தினரை ஈடுபடுத்தக் கூடிய இதே வேளை, அவசரகாலச் சட்டத்தை நீக்கியமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நேற்று நாடாளுமன்றில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நன்றி தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## நீர் விநியோகம் தடைப்படும்

கோண்டாவில் தண்ணீர் பம் திடீரென திருத்த வேலைக்கு உட்படுத்தப்படுவதால் நீர் விநியோகம் இன்று தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக பவுசர்கள் மூலம் மக்களின் தேவையை பூர்த்தி செய்வதுடன் திருத்த வேலை முடிந்ததும் உடனடியாக நீர்வழங்கல் இடம்பெறும் என யாழ். மாநகர சபை முதல்வர் அறிவித்துள்ளார். (ச-9)


## தவறிவிட்டது

இல.433, 6-ம் யூனிற் இராமநாதபுரத்தைச் சேர்ந்த சி.குணரத்தினம் (துயாளன்) என்பவருடையமோட்டார்சைக்கிள் ஆவணம் அடங்கிய கை பை ஒன்று கிளிநொச்சி குளத்திற்கும் வட்டக்கச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஜெயச்சந்திரன் ரெக்ஸ்-
25, சில்வா வீதி, வட்டக்கச்சி
எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.
(C-4356)

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

## ஆவணி திருவோணம்



உரும்பிராய் சிவதர்ம சாஸ்த்தா ஆலயத்தில் 09.09.2011 நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஐயப்பன் ராஜபவனி உற்சவம் நடைபெறும்.

அனைத்து ஐயப்ப பக்தர்கள்அனைவரையும் சுவாமி ஐயப்பன்அழைக்கின்றான்.

சரணம் ஐயப்பா

உபயம்:-
ஆ.யோகதாசன்,
உரும்பிராய் கிழக்கு

தேவஸ்தானம்
குருசுவாமி

6081


## வேலணை பிரதேச சபை

### அறிவித்தல்

புனித சித்தாத்திரை மாதா ஆலய வருடாந்த உற்சவம் 08.09.2011 வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இத் தினங்களில் அதிகளவான பக்தர்களின் வருகையை எதிர்பார்த்து குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகளுக்கான ஏற்பாடுகள் வேலணை பிரதேச சபையால் செய்யப்பட்டுள்ளன.

இக் காலப் பகுதியில் ஆலய சுற்றாடலில் தற்காலிகமாக வியாபாரம் செய்வோர் வேலணை பிரதேச சபையின் உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தற்காலிக வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்று பிரதேச சபையின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும்.

மேலும் சகல வாகனங்களின் பாதுகாப்புத் தொடர்பாக அதற்கென ஒதுக்கப்பட்ட வாகனத் தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்தி உரிய தரிப்பிடக் கட்டணங்களைச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு வாகன உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அத்துடன் அனைவரும் பொலித்தீன் பாவனையையும் இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

சின்னையா சிவராசா
தலைவர்,
வேலணை பிரதேச சபை.

(C-4359)


## தேவை





கணனி அறிவுடைய, ஆங்கில அறிவுடைய பெண்கள் வேலைக்குத் தேவை

தொடர்புகளுக்கு:-
0778458245

(சி-4358)

வடமராட்சி மக்களுக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.
வீட்டிலேயே டிப்ளோமா, பட்டப்படிப்பு, உயர் பட்டப்படிப்பு

உடன் தொடர்பு கொள்க

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

SACHCHI INTERNATIONAL ACADEMIA

நெல்லியடி ம.ம.வித்தியாலயம் அருகில்
நெல்லியடி, கரவெட்டி.

கல்வி இயக்குநர் :அதிபர் திரு-சிறீபதி B.A.Dip in Ed.
Hartly College முன்னாள் அதிபர்; உதவி கல்வி அதிகாரி
தொலைபேசி: 0772292758, 0214911733

(605)

# இன்று ஒரு தகவல்

## வெற்றிக்குக் காரணம்!

ஓர் ஊரிலே ஏழைக்குடியானவன் ஒருவன் இருந்தான்.

அவன் ஒரு சிறிய அலுவலகமொன்றில் வேலை செய்து கொண்டிருந்தான்.

அதிலிருந்து கிடைக்கும் சிறிய வருமானத்தை வைத்துக் கொண்டு தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன் தெருவில் பயணித்துக் கொண்டிருந்தபோது ஒரு நாணயக்குற்றியை நிலத்தில் இருந்து எடுத்தான்.

அது ஒரு பழங்கால நாணயக்குற்றியாகும். அதன் நடுவில் ஒரு துளை. பழங்காலத்தில் மக்களிடையே புழக்கத்தில் இருந்த ஒரு நாணயம் ஆகும்.

துளையிட்ட நாணயம் கிடைத்தால் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்னும் ஒரு நம்பிக்கை ஆதிகாலத்தில் இருந்தது.

இவன் கையில் அது கிடைத்ததும் மிகவும் சந்தோஷப்பட்டான். ''எதிர்வரும் காலங்களில் என்னுடைய கஷ்டமெல்லாம் தீரப்போகிறது. இனி அதிர்ஷ்டம் என்னைத் தேடிவரும்... நான் பணக்காரன் ஆகிவிடுவேன்...!'' என்று கூறிக்கொண்டு அந்தத் துளையிட்ட நாணயத்தை தனது கோட்டுப் பையிலே கவனமாக வைத்துக் கொண்டான். அடிக்கடி அதைத் தொட்டுப் பார்த்துக் கொள்வான். ஆனால், வெளியில் எடுக்கமாட்டான்.

சிறிது காலம் செல்ல உண்மையாகவே அதிர்ஷ்டம் அவனைத்தேடி வர ஆரம்பித்தது.

செல்வம் வந்து குவிந்தது. பணம், பதவி, புகழ் எல்லாம் அவனை வந்து சேர்ந்தது. சமூகத்தில் அவன் ஒரு பெரிய மனிதனாக மாறிவிட்டான். எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள்.'எதைத் தொட்டாலும் வெற்றி.

எல்லாம் அந்த நாணயக்குற்றியின் மகிமை என அவன் மனதினுள் நினைத்துக் கொண்டான்.

தினமும் காலையில் அந்தக் கோட்டை அணிந்து கொண்டுதான் வெளியே கிளம்புவான். புறப்படுவதற்கு முன் கோட்டுப் பொக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொள்வான். நாணயக் குற்றி இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வான்.

இப்படியே பல வருடங்கள் உருண்டோடின.

ஒருநாள் அவனுக்கு துளையிட்ட நாணயத்தைப் பார்க்க ஆசை வந்தது.

அப்போது தன் மனைவியிடம், ''நீண்ட நாளைக்குப் பின் என்னுடைய அந்த நாணயத்தை இன்றைக்கு வெளியே எடுத்துப் பார்க்கப் போகிறேன்'' என்றான்.

அதற்கு மனைவி சம்மதப்பட்டு வரவில்லை.உடனே அவன் ''இல்லை... இல்லை... பார்த்தே தீரவேண்டும்!'' உடனே அந்தக் கோட்டின் பொக்கெட்டினுள்ளே கையை விட்டு உள்ளே இருந்த நாணயத்தை வெளியே எடுத்தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அந்த நாணயத்தில் இருந்த துளையே இல்லை! என்ன நடந்தது என்று அவன் மனம் குழம்பி நின்றான்.

அப்போது அவனது மனைவி ''நான்தான் ஒரு நாள் உங்கள் கோட்டு மிகவும் தூசியாக இருக்கிறதைப் பார்த்துவிட்டு ஜன்னல் ஊடாக வெளியே உதறினேன். உள்ளே அந்தக் காசு இருக்கிறது எனக்கு ஞாபகம் வரவில்லை. அது தெருவில் விழுந்து விட்டது. தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. யாரோ அதை எடுத்து விட்டார்கள். இந்த நாணயக்குற்றி இல்லை என்று உங்களுக்குத் தெரிந்தால் வருத்தமாக இருக்குமென்பதால், நான் வேறொரு நாணயத்தை எடுத்து கோட்டு பொக்கெட்டினுள் வைத்துவிட்டேன்!'' என்றாள்.

''இது எப்போது நடந்தது?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு அந்தக்குற்றி கிடைத்த மறுநாளே நடந்துவிட்டது'' என்றாள்.

இதிலிருந்து நாம் ஒன்றை விளங்கிக் கொள்ளுகின்றோம்.

அவனுக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுத்தது அந்த நாணயம் இல்லை. அவனது நம்பிக்கை! அதாவது தன்னம்பிக்கையாகும்.

வாழ்க்கையிலே முன்னேற நினைப்பவர்களுக்குத் தன்னம்பிக்கை மிகவும் முக்கியமானது. அது இல்லாவிடின் முன்னேற முடியாது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சொத்துக்களை இழந்தோருக்கு சம அளவான இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும்

## அமைச்சர் ஜனக பண்டார தெரிவிப்பு

காரைநகரில் கடற்படைமுகாம் விஸ்தரிப்பின்போது சொத்துக்களை இழந்தவர்களுக்கு இழக்கப்பட்ட சொத்துக்களுக்கு சம அளவான இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்படும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் கடற்படை முகாம் 1985ஆம் ஆண்டுக்கு முன்பு விஸ்தரிக்கும் போது காணிகளை இழந்தவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காரைநகர் யா/கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்கி உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், காரைநகர் கடற்படைமுகாம் விஸ்தரிப்பின்போது சுமார் 153 குடும்பங்கள் சொத்துக்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 46 குடும்பங்களுக்கு சுமார் 45 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

ஏனையோருக்கு இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சொத்துக்களை இழந்தவர்கள் துன்பப்படும் வேளையில் புரியப்பட்ட குற்றங்களை நிவர்த்தி செய்ய எல்லோருக்கும் சம அளவான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. இதனைப் பெற்று அனைவரும் பயனடைய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் இழப்பீட்டுத் தொகைக் கொடுப்பனவு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியால்வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் ஸ்ரீபால ஹெமலத், காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அசோகபீரிஸ், வடமாகாண காணி அபிவிருத்தி உதவி ஆணையாளர் தயானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-246)

# இராசி பலன்

**08.09.2011**
**(ஆவணி 22, வியாழக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு**
**ஏகாதசி பிற்பகல் 12.33 மணிவரை**
**உத்தராடம் பின்னிரவு 1.41 மணிவரை**
**இராகுகாலம் 1.34-3.04 மணிவரை**
**சுபநேரம் 7.34-9.04 மணிவரை**
**பரிவர்த்தன ஏகாதசி விரதம்.**

**மேடம்** 
இனிமையான நாள்,நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்,தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், சொத்துக்களால் நன்மையுண்டு.

**இடபம்** 
ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள்,அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பிரியமான சிலரோடு ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

**மிதுனம்** 
யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள்,திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்,உடல் நலனில் கூடிய அக்கறை காட்டவேண்டிய நாள்.

**கடகம்** 
அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறும்,தொழில் சம்பந்தமான தொலைதூரச் செய்திகள் மகிழ்ச்சி தரும்,விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**சிங்கம்** 
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும்,நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**கன்னி** 
சுப செலவுகள் வந்து சேரும் நாள்,சேமிப்புக்கள் உயர்வடையும்,மைத்துனர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புத்திரர்களால் பெருமைப்படுவீர்கள்.

**துலாம்** 
நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்** 
பாராட்டும் புகழும் அதிகரிக்கும்,வருமானம் அதிகரிக்கும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** 
தொலைபேசி மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், பணவரவு திருப்தி தரும்,வாக்கு மேன்மையுண்டு,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்** 
சிந்தனைகள் அதிகரிக்கும் நாள்,உடல் நலம் சீராகும், பெரியோர் சந்திப்புண்டு, தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்** 
பயணத்தால் பலனுண்டு, தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள், வேலைச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்** 
விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், தொலை தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றி பெறும், காரிய நன்மையுண்டு.

வளவன்

# கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்தப்படவிருந்த நூலக தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கான(PGD in Library and Information Science) ஆரம்ப நிகழ்வும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருந்த கல்விச் செயற்பாடுகளும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக உயர் பட்டப்படிப்புகள் பீடபீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 11 ஆம் திகதி நடத்தப்படவிருந்த சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிக் -கற்கை நெறிக்கான (m.Sc in Environmental management) நேர்முகத் தேர்வும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இவற்றுக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 130 | 90 |
| பச்சைமிளகாய் | 90 | 120 | 100 |
| தக்காளி | 30 | 60 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 50 | 70 | 50 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 130 | 80 |
| பயற்றங்காய் | 50 | 80 | 100 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 15 | 30 | 20 |
| கறிமிளகாய் | 40 | 40 | 70 |
| முருங்கைக்காய் | 90 | 160 | 90 |
| போஞ்சி | -- | 110 | 90 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 8 | 20 | 15 |
| தேசிக்காய் | 150 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 20 | 30 |

# பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டும்

## பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டும் என வலியுறுத்தி பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று நாடளாவிய ரீதியில் ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தை அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஊழியர் தொழிற் சங்கங்களின் சம்மேளனமும் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் நிர்வாக உத்தியோகத்தர் தொழிற்சங்கங்களின் சம்மேளனமும் இணைந்த கூட்டுக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் பல்கலைக்கழக பிரதான வாயிலில் ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக கோஷங்கள் எழுப்பியதோடு கையில் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

அதில் உத்தேச சம்பளத் திட்டத்தை பரிசீலனை செய்வதில் ஏன் தாமதம், சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச சம்பளத் திட்டத்தை உடனே பரிசீலனை செய், பல்கலைக்கழக சுயதீபத்தியத்தை நிலைநாட்டு, சம்பள முரண்பாடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் திறமையின்மை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகளே உத்தேச சம்பளத்திட்டத்தை பரிசீலனை செய்வதில் ஏன் தாமதம் அல்லது பரிசீலிக்கத் தெரியாதா என்றவாறு எதிர்ப்புத் பதாதைகளை தாங்கி நின்றனர்.

அத்தோடு ஊழியர்கள் தமது உடலில் சிவப்பு நிற பட்டியை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை முழு நாளும் சுகவீன விடுப்பு போராட்டத்திலும் ஈடுபடுவதென தாம் தீர்மானித்துள்ளதாகவும் அதில் சகல போதனை சாரா ஊழியர்களும் கலந்து கொள்ளுமாறு தாம் அழைப்பு விடுவதாக போராட்டத்தில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்.

அத்தோடு இந்தப் போராட்டத்தில் பாதுகாப்பு ஊழியர்களுக்கு விலக்களிக்கப் பட்டுள்ளதாகவும் மாணவர்கள் விடுதிக்கு நீர் வழங்கும் சேவையும் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஊழியர்களுடன் சம்பள முரண்பாட்டில் ஈடுபடுவதை வெளிப்படுத்தும் முகமாகவும் ஆணைக்குழு ஊழியர்களை அடக்கி ஆள முற்படுவதை வெளிப்படுத்தும் முகமாகவும் ஒருவர் வேடம் அணிந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார். (ஸ்ரீ-6)




## சாட்டி தூய சிந்தாத்திரை மாதா பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்



(நவாலி)

யாழ்.மறைமாவட்டத்தின் 450 வருட வரலாற்றுச் சிறப்புமிக்க சாட்டி புனித சிந்தாத்தரை மாதா திருத்தல பெருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

யாழ்.மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளின் ஒன்றிணைந்த ஒத்துழைப்புடன் தினமும் மாலை 5 மணிக்கு திருச் செபமாலையுடன் திருப்பலியும் விசேட மறையுரைகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் அன்னையின் புதுமைமிக்க திருச் சொரூபபவனியும் விசேட ஆசீரும் இடம்பெறவுள்ளன.

இக்காலங்களில் அன்னையின் திருத்தலத்திற்கு வருகைதரும் யாத்திரிகர்களுக்கான அனைத்து வசதிகளையும் திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஸ்ரனிலொஸ் பிலிக்ஸ் அடிகளார் ஒழுங்குபடுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-26)

## மதுபோதையில் நிதானம் தவறிய குடும்பஸ்தர் ஆட்டோவுக்கு தீவைத்தார்

### யாழ்.மடம் வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் தனக்குச் சொந்தமான ஆட்டோவை எரித்த குடும்பஸ்தர் ஒருவர் மீது இராணுவத்தினர் தாக்கியதில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மடம் வீதியில் நேற்று முன்தினம் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குறித்த நபர் நன்றாக மது அருந்திவிட்டு தனது மனைவியுடன் ரகளையில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் பிள்ளைகளை வீட்டுக்குள் அமர்த்திவிட்டு வீட்டு வாசலில் ஆட்டோவை தீ வைத்து எரித்துள்ளார்.

இதனைப் பார்த்த பிள்ளைகள் கூச்சலிடவே அங்கு விரைந்த இராணுவத்தினர் இவரை சரமாரியாக தாக்கியதுடன் பிள்ளைகளையும் காப்பாற்றினர்.

மேற்படி சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த இ.பாலமுரளி(வயது-28) என்பரே அடிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2-4)




## 2.6 மில்.ரூபா செலவில் பால் நிலையம் அமைப்பு

(கரவெட்டி)

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க பால்நிலையம் 2.6 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

மேற்குறித்த நிதியானது கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதோடு அவர்களின் மேற்பார்வையின் கீழ் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி முத்தையாவின் குருபூசை எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஏழாலை இலந்தைகட்டி பாதாள ஞான வைரவர் கோயில் பூசையைத் தொடர்ந்து ஆத்மஜோதி தியான மணி மண்டபத்தில் புராண வித்தகர் சைவத்திரு சிவசண்முக வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-12)

## கட்டப்பிராயிலும் மர்ம மனிதர்கள்

(இருபாலை)

கட்டப்பிராய் கலைமணி வீதியில் இரு மர்ம மனிதர்கள் புகுந்ததால் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இப்பகுதியிலுள்ள வீடொன்றினுள் பதுங்கியிருந்த மர்ம மனிதர்கள் வீட்டு உரிமையாளர்கள் தமது உறவினரது திருமண வைபவத்திற்கு சென்று நேற்று அதிகாலை 5 மணிக்கு வீடு திரும்பி வந்து வீட்டின் பின்புறமுள்ள மின் விளக்கை போட முயன்ற யுவதியின் கையை பிடிக்க முற்பட்டுள்ளார்கள்.

இதன்போது அப்பெண் குரலெழுப்பவே அப்பகுதி மக்கள் திரண்டு பிடிக்க முற்பட்ட வேளை தப்பித்து ஓடியுள்ளனர்.

இம் மர்ம மனிதர்கள் கறுப்பு உடையணிந்து அங்கு வந்துள்ளதாக அப்பெண் கூறியுள்ளார். (ஸ்ரீ-12-136)

# மரணித்தவர்கள் துயிலுமிடங்கள் பரிசுத்தமான வணக்கத்துக்குரிய இடங்களாக மாற வேண்டும்

எல்லாச் செல்வத்திலும் கல்விச் செல்வமே அதிசிறந்தது என்பதை சண்முகநாதன், அருள்நங்கை தம்பதிகள் தமது புதிய உயர் கலைக்கல்லூரியூடாக கல்விச் சேவையாற்றி வருகின்றனர்.

அத்துடன் சமூகத் தொண்டிலும் அவர்கள் ஈடுபாடு கொண்டவர்களாக தமது மகன் சந்துதன் துயில் கொள்ளும் ஆனைக்கோட்டை காக்கைதீவுப் பகுதியில் உள்ள கரையான் பிட்டி மயானத்தை புனரமைப்பு செய்வதோடு இன்னும் பல பொதுச் சேவைகளையும் ஆற்றி வருகின்றனர்.

இப்பணி குறித்த புதிய உயர் கலைக் கல்லூரி இயக்குநர் சண்முகநாதனுடனான நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

**புதிய உயர் கலைக்கல்லூரி இயக்குநர் சண்முகநாதனுடன் ஓர் நேர் காணல்**

**உங்கள் மகனைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

எனது அருமை மகனார் சந்துதனுக்கும் எனக்கும் இடையே உள்ள பாசப் பிணைப்பை பரந்த ஆழ் கடலுக்கு ஒப்பிடலாம். அலை கடல் போல் எனது மகனார் நினைவலையும் நித்தம் வந்த வண்ணம் உள்ளது.

**நீங்கள் இந்த மயானம் புனரமைப்பதன் நோக்கம் என்ன? சற்று விபரமாக கூறுங்கள்?**

இங்கு எனது மகனார் துயில் கொள்கிறார். எங்கள் அருமை மகனார் நிரந்தரமாக துயிலும் இடம் பரிசுத்தமுடைய இடமாக மாற வேண்டும் என்பதே இப்புனரமைப்பின் நோக்கமாகும்.

இந்து மயானங்கள் பயம் அற்ற பரிசுத்தமான இடமாக இருப்பதற்குப் பதிலாக பற்றைகள், செடி, கொடிகள் படர்ந்து அசுத்தமான நிலை காணப்படுகிறது. தற்போது பயம் உள்ள சூழல் இருப்பதனால் இந்த நிலை மாறி மரணித்தவர்கள் துயிலுமிடங்கள் பரிசுத்தமான வணக்கத்துக்குரிய இடங்களாக மாற்றம் பெற வேண்டும். அந்த வகையில் இந்து மயானங்கள் புனரமைப்பு பெற்று திகழ வேண்டும். அதற்கு முன்னோடியான பணியாக இந்த மயானத்தை புனரமைக்க எண்ணியுள்ளேன்.

**இந்த மயானம் எங்கே அமைந்துள்ளது, இப் புனரமைப்பு பணிக்காக எவ்வளவு செல விட எண்ணியுள்ளீர்கள்?**

நான் புனரமைக்கும் இவ்விடம் எம் அருமை மைந்தனும் ஏனைய ஆத்மாக்களும் துயில் கொள்ளும் இடமான ஆனைக்கோட்டை காக்கைதீவு கரையான் பிட்டி மயானமாகும். இம் மயானம் திறந்த வெளியாக எந்தவித அடைப்புக்களும் இல்லாத பாம்பு புற்றுக்களும் விஷ ஜந்துக்களும் வாழும் பற்றை, செடி, கொடிகளும் மூடிக் கிடந்தது. மதுப்பிரியர்கள் இம் மயானத்தை தம் தேவைகளுக்கு பயன்படுத்தியதோடு வழிப் பறிக் கொள்ளை நடத்துபவர்களுக்கும் கழிப்புக் கழித்தல், சூனியம் செய்தல் முதலானவற்றிற்கும் பயன்படுத்தி கொண்டிருந்த பயம் தரும் இடமாகவே இருந்தது.

தற்பொழுது இம் மயானம் துப்புரவு செய்யப்பட்டு சுற்று மதில்கள், மின்சாரம், நீர் விநியோகம் என்பவற்றோடு பாதை அமைவுகள் என்பன அமைக்கப்பட்டு பராமரிப்புப் பணி என்பவற்றையும் செய்வதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேற்குறித்த இந்தப் பணிக்கு ரூ.25இலட்சம் ஒதுக்குவதற்குள்ளோம்.



**நீங்கள் உங்கள் மகன் மரணித்த செவ்வாய்க்கிழமைகளில் சகல வேலைகளையும் ஒதுக்கி வைத்து இங்கு வருகிறீர்கள். அது பற்றி விபரிப்பீர்களா?**

எமது அருமை மகனை நாம் பிரிந்த அந்த கொடிய கிழமை அது. அந்த நாளிலும் அவர் வீட்டை விட்டு சென்ற வியாழக்கிழமைகளிலும் நான் எந்த முக்கியமான வேலையாயினும் அதனை விடுத்து என் பிள்ளை துயிலும் அந்த இடத்தில் என்பொழுதை அவருடன் இன்பமாக கழித்து வருகிறேன்.

**உங்கள் மகனாரது துன்பமான பிரிவிற்கு பின்னரும் புதிய உயர் கல்லூரியை விரிவுபடுத்த வருகிறீர்கள். அதன் நோக்கம்?**

இக் கல்லூரியின் விரிவாக்கமும் என் மகனாரின் ஞாபகார்த்தமாகவும் அவரின் மனவிருப்பத்தை நிறைவு செய்வதாகவும் அமைகின்றது.

பல்கலைக்கழகத்திற்குரிய தகுதி புள்ளி இருந்தும் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படாத மாணவர்கள் மன ஏக்கம் இன்றி தாமும் பல்கலைக்கழக தகுதிக்குரிய வகையில் கற்கின்றோம் என்ற மனச் சமாதானத்தோடு கற்க வேண்டும் என்பதற்காக இயன்றளவு கட்டட வசதிகள் செய்து கொடுப்பது இவ் விரிவாக்கத்தின் அடுத்த நோக்கம்.

இக் கல்லூரியினூடாக பாதிக்கப்பட்ட வசதி குன்றிய அநாதரவான பல மாணவர்கள் இலவசமாக கற்க வசதி செய்து கொடுத்துள்ளோம்.எந்தவித அறவீடும் இல்லாமல் தூர இட மாணவர்கள் தங்கிக் கற்பதற்கு இட வசதி செய்து கொடுத்துள்ளோம். எமது கல்லூரி சமூக சேவை அமைப்பினை ஏற்படுத்தி தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து வருகிறார்கள். மண்டபங்கள் பொதுச் சேவைக்காக இலவசமாக வழங்கப்படுகின்றன. நோய் முதலானவற்றாலும் ஆதரவில்லாமலும் இருப்பவர்கள் எந்நேரம் உதவி கேட்கின்ற பொழுதும் எமது மாணவர்களின் சமூக சேவை அமைப்பானது உதவுவதற்கு முழு ஆதரவையும் வழங்கி வருகின்றது.

**கல்லூரி ஊடாக நீங்கள் ஆற்றும் பணிகளைவிட பிற நிறுவனங்களூடாக பணி ஆற்றி வருகின்றீர்களா?**

ஆம். தொண்டு நிறுவனங்களின் தேவை கருதி உரிய காலங்களில் அவற்றிற்குரிய உதவிகளை செய்து கொண்டிருக்கின்றோம். இது மட்டுமல்ல இனிவரும் காலத்தில் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அநாதரவான குழந்தைகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் அவர்களுக்குரிய பராமரிப்புப் பணியை ஆற்றும் நிறுவனம் ஒன்றை செயற்படுத்த உள்ளோம். இது கூட எமது மகனாரின் ஞாபகார்த்தமாகவே அமையும்.

**எந்த ஆண் மகனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் துலங்குவாள் என்ற கூற்றுக்கு அமைய தங்கள் துணைவியாரின் பங்கு எத்தகையது?**

கடந்த 24 வருடங்கள் தனியார் கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளராக கடமையாற்றி வரும் எனது துணைவியார் அருள்நங்கை அரச உத்தியோக வாய்ப்புக் கிடைத்த பொழுதும் அதனை விடுத்து எனது கல்லூரியின் நிர்வாக இயக்குநராகவும் இக் கல்லூரி வளர்ச்சியின் முழுமையான பங்கை வகித்து வருகிறார்.

நற்பணிகளை நான் ஆற்றுவதற்கு முழு மனதோடும் பரந்த சிந்தனையோடும் எனக்கு முழு ஆதரவையும் வழங்கி என்னை செயற்படுத்தி வருகின்றார். அவருடைய பக்கபலமே என்னுடைய அனைத்து செயல்களுக்கும் உதவுவதாக அமைந்துள்ளது.

**எஸ்.நடராஜா**
**ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை வங்கி.**

**இறுதியாக யாழ்.குடா நாட்டு மக்களுக்கு ஏதாவது இந்நேர்காணல் மூலமாக கூற விரும்கிறீர்களா?**

ஆம், அவர்கள் பட்ட துன்ப துயரங்கள் முழுமையாக இதுவரை நீங்கவில்லை. எத்தனையோ சிறுவர்கள் தமது பெற்றோரை இழந்து அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

எத்தனையோ இளம் விதவைகள் வாழ்வாதாரம் இன்றி அல்லல்படுகிறார்கள். இவை அனைத்தும் அகன்று அமைதியான வாழ்க்கை கிடைக்க நிறுவனங்களும் உயர் பதவி வகிப்பவர்களும் பணம் படைத்தவர்களும் முன்வர வேண்டும். காலப் போக்கில் அமைதி திரும்ப அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

## நீர்கொழும்பில் கப்பம் பெற்ற ஐந்து சந்தேக நபர்கள் கைது

நீர்கொழும்பு பகுதியில் கப்பம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நீர்கொழும்பு பகுதியிலுள்ள மீனவர்களிடமிருந்து கப்பம் பெற்றுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கடந்த இரு தினங்களாக மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போதே இந்தச்சந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## இந்தியக் கடற்பரப்பில் தத்தளித்த 4 மீனவர்கள் பாதுகாப்பாக மீட்பு

இலங்கை மீனவர்கள் நால்வர் இந்திய மீனவர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 4ஆம் திகதி முதல் இந்தியக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த குறித்த மீனவர்கள் ஆந்திரப் பிரதேச மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.நேற்று முன்தினம் அவர்கள்பாதுகாப்பாக கரைக்கு அழைத்துச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. அவர்கள் பயணித்த படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறினால் இந்த நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது அவர்களுக்கு உணவு, பாதுகாப்பு, மருத்துவ உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருவதாக இந்தியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (ஸ்ரீ-2)

## வாழ்த்துகின்றோம்



பி.கிருஷ்ணானந்தன்

மக்கள் வங்கி வல்வெட்டித்துறை கிளையில் கடந்த ஆறு ஆண்டுகளாக முகாமையாளராக சேவையாற்றி எமது பிரதேச வர்த்தக மேம்பாட்டிற்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து 05.09.2011 இல் இருந்து மக்கள் வங்கி பருத்தித் துறை கிளை முகாமையாளராகப் பதவியேற்றுள்ள **உயர்திரு. பி.கிருஷ்ணானந்தன்** அவர்களை மகிழ்வுடன் மேலும் சிறப்பு பெற்று சிறந்த சேவையாற்றி வாழ வாழ்த்துகின்றோம்.



திருமதி றொசற் மெலானி தவநாயகம்

அத்துடன் மக்கள் வங்கி வல்வெட்டித்துறை கிளைக்கு புதிய முகாமையாளராக பதவியேற்றுள்ள **திருமதி. றொசற் மெலானி தவநாயகம்** அவர்களை வரவேற்று மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

பொ.பாலசுப்பிரமணியம்
எஸ்.சிவராசா
க.கருணாகரன்
சே.சிறிஸ்கந்தராசா

சித்திவிநாயகர் எலக்ரிக்கல், வல்வெட்டி.
இன்பம் கூல்பார், வல்வெட்டி.
மிதுஷன் சைக்கிள்வேக்ஸ், வல்வெட்டித்துறை.
பானு ஸ்ரோர்ஸ், வல்வெட்டி.

(சி-4349)

## சிறப்புச் சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதியிலிருந்து நாளை மறுதினம் சனிக்கிழமை வரை விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு **வாழ்வாங்கு வாழ் வோன்** எனும் தலைப்பில் ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம், நாளை வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு **வேல் எடுத்தவேள்** எனும் தலைப்பில் ஆசிரியர் இரா.செவ்வடிவேல், நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு **சந்நிதியான் அருட்கடாட்சம்** எனும் தலைப்பில் சிவத்திரு வ.குமாரசுவாமி ஐயர் ஆகியோர் சொற் பொழிவாற்றவுள்ளனர். (ஸ்ரீ-2-12)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாண கல்வி வலயத் திற் குட்பட்ட யாழ்ப்பாணக் கோட்டம், நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த அதிப ர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப் பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## வசந்த மண்டப மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்-வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான நூதன வசந்த மண்டப மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை 11.40 மணி தொடக்கம் 12.40 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. இதில் மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதியுலா வருதலும் இடம்பெறும். (ஸ்ரீ-12)

# தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்காதேவி தேரேறி எமைக் காக்க வருகிறாள்

சர்வலோக நாயகியாக விளங்கும் பராசக்தி, தெல்லிப்பழைத்திருவூரில் துர்க்காதேவியாக வீற்றிருந்து நல்லருள் பாலித்து வருகிறாள்.

உலகம் அறிந்த தெல்லிநகர் துர்க்கை அம்பாள் தேர் ஏறிவருகின்ற புண்ணிய நாளாகிய இன்று பல்லாயிரம் பக்தர்கள் தெல்லிநகரில் ஒன்று கூடுவர். அழகான சித்திரத் தேரில் அம்பாள் ஆடி அசைந்து வரும் அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தமடைவர். துன்பங்களைக் போக்கும் துர்க்காதேவியிடம் தங்கள் வேண்டுதல்களைக் கூறி ஆறுதல் பெறுவர்.

கதிர்காமர் என்ற அற்புத ஞானி காசியில் தவம் செய்து துர்க்காதேவி யின் யந்திரத்தைக் கொண்டு வந்து ஸ்தாபித்த இத்திருக் கோவிலிற் அருள் சக்தியை சொல்லில் வழங்க முடியாது.

உலகம் போற்றும் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க தொண்டால் வளர்க்கப்பட்ட உயர் ஸ்தாபனம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் என்றால் மிகையா காது.

இத்தேவஸ்தானத்தின் வளர்ச்சிப் பாதையில் 4.9.1978 அன்று அழகான புதிய சித்திரத்திருத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற்றது.

சிற்பக் கலைஞர் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களின் கைவண்ணத்தில் உருவான அற்புத வேலைப்பாடுகளைக் கொண்ட உறுதியான சித்திரத்தேரின் சிறப்பை பலரும் பாராட்டி வருகின்றனர்.

சித்திரத் தேரை உருவாக்குவதற்கு தர்ம

### தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழா இன்று

கர்த்தாசபை, நிர்வாகசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் போன்ற அமைப்புக்களின் தொண்டுப் பணியும் ஏதுவாக அமைந்துள்ளது.

துர்க்காதேவியின் திருத்தேர் விழாச்சிறப்புக் குறித்து அமரர் வாகீச கலாநிதி கி.வா. ஜகநாதன் பின்வருமாறு குறிப்பிட்டார்.

வாருங்கள் தேரை வணங்குங்கள் -ஈர்
க்க நன்றாய்ச்
சேருங்கள் துர்க்கை திறம் பேசி-ஆரும்
கருணைமிகச் கொள்ளுங்கள் காசினி
இஃதே
அருள்சேர்க்கும் நல்லதோர் ஆறு.

கருணை மழை பொழியும் அம்பாளின் திருவருள் பெறும் இந்நாளில் அனைவரும்



ஆசாரத்துடன் வந்து வணங்குங்கள். எங்களை சூழ்ந்துள்ள அச்சங்களை விரட்டி அனைவரும் ஆனந்தமாக வாழ வைக்கும் மாறு மன்றாடுங்கள். தர்மம் நிலைக்கத் தாயின் தேர் விழா சிறக்கட்டும் வாரீர்.

**செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

# தொழில்வாய்ப்பை இலக்காக கொண்ட கல்விமுறைமை உருவாக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்ட கல்வி முறைமையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

### ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை

கல்வி, உயர்கல்வி, இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி தொழில்நுட்பம், ஆராய்ச்சி, விளையாட்டு ஆகிய அமைச்சுக்களின் அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த துறைகளுக்குத் தேவையான திறமை மற்றும் கல்வியறிவு ஆகியன இல்லாத காரணத்தினால் அந்தத் துறைகளில் காணப்படும் தொழில் வெற்றிடங்களுக்கு பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எனவே குறித்த துறைக்குப் பொருந்தும் வகையில் கல்வி முறைமை உருவாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.



தொழில் மற்றும் கைத்தொழில் கல்வி தொடர்பில் பாரியளவு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தினை ஜனாதிபதி இந்தக் கலந்துரையாடலின் போது வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)


**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

**A/L 2012 DAY CLASS**

*2011 AUG A/L* பரீட்சைக்குத் தோற்றியவர்கட்குரியது

**கணித, உயிரியல் பிரிவு**

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

COM. MATHS :- திரு.S. செந்தில்ராஜ், திரு.P. செந்தில்நாதன்
7.30-8.30
BIOLOGY :- வழமையான ஆசிரியர் - திரு.T. கெங்காதரன்
7.30-8.30
PHYSICS :-திரு.R. குகன்
8.30.-10.00
CHEMISTRY :-திரு.K. சிவத்திரன்
10.00-11.30

(சி-4353)

**ஆரம்பம்:- 09.09.2011 வெள்ளி காலை 7.30 AM**



**வாழ்வு எழுச்சி-மனைப் பொருளாதார தேசிய நிகழ்ச்சித் திட்டம்**

**குடிசைக் கைத்தொழில் கண்காட்சி**

இடம் :- யா/ இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
திகதி :- 10.09.2011 தொடக்கம் 11.09.2011 வரை
நேரம் :- காலை 9.00 மணி முதல் மாலை 5.00வரை

கைத்தொழிலில் ஈடுபடுவோர், கைத்தொழிலில் ஈடுபட ஆர்வமுடையோர் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-4344)



JAFFNA COLLEGE CEYLON

**பாரதி விழா-2011**

யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் பாரதி விழா எதிர்வரும் 09.09.2011 (வெள்ளிக்கிழமை) அன்று கல்லூரி ஒட்லி மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக **கௌரவ எஸ்.கே.யோகநாதன்**, தலைவர், கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஆசிரியுரை:- அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன்
பாரதி விழா ஆரம்ப கர்த்தா
தொடக்கவுரை:- திரு.என்.ஏ.விமலேந்திரன் J.P, அதிபர்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தமிழ் மன்றத்தினர், யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(சி-4345)

# மன்னாரில் முன்னாள் இயக்க உறுப்பினர்கள் தொடர்பாக புலனாய்வுத்துறையினர் விசாரணை

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் இயக்கம் மற்றும் அமைப்புக்களில் இணைந்திருந்து பின் அதனையெல்லாம் விட்டு விட்டு குடும்பங்களுடன் இணைந்து வாழ்ந்துவரும் முன்னாள் இயக்க உறுப்பினர்களை புலனாய்வுத் துறையினர் அவர்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பாதிக்கப்பட்டவர்களால் தம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த யுத்த காலமான 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் இயக்க அமைப்புக்களில் இருந்துசெயற்பட்டவர்கள் பலர் விலகியும் சரணடைந்தும் பின் தமது குடும்ப வாழ்வில் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். தற்போது அவர்கள் எந்த அமைப்புக்களுடனும் எவ்வித தொடர்புமற்ற நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் சுமார் 20 வருடங்களின் பின் தற்போது யுத்தமும் முடிவடைந்துள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள முன்னாள் இயக்க உறுப்பினர்கள் தொடர்பாக அவர்களுடைய கிராமங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை அவர்களையும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களையும் அச்சுறுத்தும் செயலாகும்.

குறிப்பாக யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து பின் மீள்குடியேறியுள்ள கிராமங்களிலேயே மேற்படி விசாரணைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேற்படி விசாரணைகளை மேற்கொண்டு வரும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் உடனடியாக இவ்விடயத்தை நிறத்தி அவர்களை நிம்மதியாக வாழ விடுமாறும் தொடர்ந்தும் அவர்களை பழைய நிலைமைக்குள் தள்ள வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கடந்த 5 நாட்களில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 22 பேர் இனங்காணப்பட்டனர்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த மாதத்தின் கடந்த 5 நாட்களுக் குள் எலிக்காய்ச்சலால் பிடிக்கப்பட்டுள்ள 22 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

குறித்த காலப்பகுதிக்குள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் 11 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப்பிரிவு தெரிவிக்கின்றது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 943 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

குருநாகல் மாவட்டத்திலேயே அதிகமானோர் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் ஆயிரத்து 402 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். அம்பாந்தோட்டையில் 445 பேரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 400 பேரும் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 60 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு மேலும் குறிப்பிடுகின்றது. (ஸ்ரீ-2)

# ஜானக பெரேரா கொலை தொடர்பில் கைதானோர் தொடர்ந்து விளக்கமறியலில்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 29 பேர் உயிரிழப்பதற்கு காரணமாக இருந்த தற்கொலை குண்டுத் தாக்குதலின் சந்தேகநபர்கள் இருவரும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 23ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற போதே சந்தேகநபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பாக இம்முறை சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

இதனையடுத்து அடுத்த வழக்கு விசாரணையின்போது சட்டத்தரணிகளின் உதவியை பெற்றுக்கொள்ளுமாறு மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர பிரதிவாதிகளுக்கு அறிவித்தார்.

ஜானக பெரேரா கொலை தொடர்பில் பத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களில் எட்டுபேர் பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். (ஸ்ரீ-2)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கான வசதிகள்

வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என அகதிகள் தொடர்பான சர்வதேச அமைப்பு அறிவித்துள்ளது.

குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ள இலங்கையர்கள் விரும்பினால் நாடு திரும்புவதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என தெரிவித்துள்ளது.

சுவீடன், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் போர் காரணமாக தஞ்சம் புகுந்த இலங்கையர்களை மீள அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பாக சட்டவிரோதமான முறையில் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்கள் மீள நாடு திரும்புவதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய வழிவகைகள் உள்ளடங்கிய அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

அலரிமாளிகையில் நடைபெற்ற அமைச்சுக்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும்மீளாய்வு கூட்டத்தின்போதே இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2011 ஆண்டின் ஜுன் மாதம் வரையான முன்னேற்றங்கள் குறித்து இவ் ஆலோசனைக் கூட்டத்தின் போது ஆராயப்பட்டதுடன் மஹிந்த சிந்தனையின் பிரகாரம் கடந்த ஒன்றரை வருடத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

வடக்கு- கிழக்கு உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட ஏனைய பிரதேசங்களினதும் பெருந்தோட்டப் பகுதிகளினதும் சுகாதார சேவைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிடுகின்றது.

திரிபோஷா திட்டத்தை மேம்படுத்தல், வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு, வசதிகள் வைத்தியர்கள் மற்றும் தாதியர் சேவைகளை சிறப்புற வழங்குதல், புதிய வைத்தியசாலைகளை நிர்மாணித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.


கடந்த ஒன்றரை வருடகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் ஊடாக டெங்கு, விசர்நாய்க்கடி நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணங்களின் எண்ணிக்கை என்பவற்றை குறைக்க முடிந்துள்ளதாக இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய யோசனைகளை உள்ளடக்கிய மாகாண சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை சுகாதார பிரதி அமைச்சர் லலித திஸாநாயக்கவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

(ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## கதிர்காமு சின்னத்துரை



பத்தமேனி வைரவர் கோவிலடியைச் சேர்ந்த கதிர்காமு சின்னத்துரை திங்கட்கிழமை (05.09.2011) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு சீதேவியின் மகனும், காலஞ்சென்ற தாமு மாணிக்கத்தின் மருமகனும், கமலா தேவியின் அன்புக் கணவரும், ஈஸ்வரநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற இந்திரநாதன் மற்றும் தேவநாதன் (பிரான்ஸ்), செல்வநாதன், ஜீவநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வசந்தி மற்றும் வாசுகி (பேராதனைப்பல்கலைக்கழகம் B.A.External) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சயாதி (சுவிஸ்), நாகநந்தினி, செல்வகுமாரி (பிரான்ஸ்), ஜனனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,சுவேதா, சுவேதன், சுஜீவன் (பிரான்ஸ்), நிறூயன், புவிதன் மற்றும் சோபனா, லக்ஸ்ஷனா, நிதர்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.09.2011) இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

கம்பானை ஒழுங்கை,
பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

(ஞ-4348)

# தேநீர் அருந்துவதன்மூலம் நோய்கள் குணமாகும்

## இலங்கையில் ஆய்வு

தேநீர் அருந்துவதன்மூலம் பல்வேறு நோய்கள் குணமாகுமென சர்வதேசத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தொடர்பில் இலங்கையில் பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்கு வைத்திய ஆய்வு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

தேநீரை அருந்துவதன்மூலம் கொலஸ்ரோல், புற்றுநோய் மற்றும் ஒஸ்டியோ புரோசிஸ் போன்ற நோய்களை குணமாக்க முடியுமென சர்வதேச ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் சில பல்கலைக்கழகங்கள் இணைந்து இந்த ஆய்வினை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆய்வுக்கு தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்கள் அண்மையில் இடம்பெற்றன. (ஸ்ரீ-2)

# ஐ.நா.மனித உரிமை பேரவை அமர்வை முன்னிட்டே அவசர காலச்சட்டம் நீக்கம்

## புரொட்லைன் இணையத்தளம் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 18 ஆவது அமர்வு ஆரம்பமாவதை முன்னிட்டே இலங்கையில் அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டதாக த புரொன்ட்லைன் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் மீது எண்ணற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை ஒன்றை கொண்டு வர மேற்குலக நாடுகளும் முயற்சித்து வருகின்றன.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக கடந்த ஓகஸ்ட் 25 ஆம் திகதி அறிவித்தார் என்றும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படுவதை பல நாடுகளும் வரவேற்றுள்ளன.

எனினும் இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் விடுதலை குறித்து சர்வதேச மன்னிப்பு சபை கேள்வி எழுப்பியுள்ளது.

மன்னிப்பு சபையின் ஆசிய பசுபிக் பணிப்பாளர் சேம் ஸராபி இது தொடர்பில் கருத்துரைக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 18 ஆவது அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை தாம் தடுத்து வைத்துள்ள தமிழ் இளைஞர்களின் விடுதலை குறித்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளமைக்கும் திட்டம் குறித்தும் விளக்கமளிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

குற்றம் புரிந்தவர்கள் மீது வழக்கு தொடரப்பட வேண்டும் அல்லது நிரபராதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் ஸ்ராபி கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

## அலங்கார உற்சவம்

(புன்னாலைக்கட்டுவன்)

அச்செழு மத்தி திருவருள்மிகு நாகதம்பிரான் ஸ்ரீமதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவப் பெருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதில் இன்று காலை 7 மணிக்கு புதிதாக அமைக்கப்பெற்ற வசந்த மண்டபக் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் மாலை 5 மணிக்கு விசேட வசந்த மண்டப பூசை நடைபெற்று, அதன் பின் திருவூஞ்சல் நிகழ்வும் இடம்பெற்று அம்மன் முத்துச் சப்பறத்தில் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (ஸ்ரீ-12)

## சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியேற்ற வேண்டும்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

சம்பூர் மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களிலிருந்து யுத்த காலத்தில் வெளியேற்றப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அனைத்தும் பூர்வீக காணிகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுதியாக உள்ளது என அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சம்பூரில் அனல் மின்நிலையம் அமைப்பதற்கான உடன்படிக்கை இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையே நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது பற்றி கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் சொந்த கிராமங்களிலுள்ள வீடுகளில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். தரிசாக கிடக்கும் நிலத்தை அனல் மின்நிலையம் நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தலாம். மக்களின் பூர்வீக காணிகளை அனல் மின்நிலையம் நிர்மாணிக்க பயன்படுத்த கூடாது என அவர் கூறினார்.

அண்மையில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின் போது இது தொடர்பில் வலியுறுத்தியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## கொழும்பு தேசிய நூதனசாலைக்கு ஈரான் ஓவியம் அன்பளிப்பு

உலகப் புகழ்பெற்ற ஈரான் ஓவியக் கலைஞர் குலாம்ரெஸா ரெஹ்பேமா தனது உன்னதமான படைப்புக்களில் ஒன்றான தங்கத்தினால் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்-என்று அரபு மொழியில் எழுதப்பட்ட ஓவியத்தை கொழும்பு தேசிய நூதனசாலைக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

சுமார் பத்தாயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்த ஓவியத்தை கொழும்பு தேசிய நூதனசாலையின் பணிப்பாளர் திருமதி கலாநிதி நந்தாவிக்கிரமசிங்கவிடம் ஓவியக் கலைஞர் குலாம்ரெஸா ரெஹ்பேமா அண்மையில் கையளித்தார்.

கொழும்பிலுள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் கலாசாரப் பிரிவு ரம்ழான் மாத நிறைவைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்த குர் ஆன் கலைகள் மற்றும் அரபு எழுத்தணிக் கலை கண்காட்சியின் இறுதி தினத்தன்று இந்த ஓவியம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. (ஸ்ரீ-2)

## மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

மின்சார விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இந்த அறிவிப்பின் படி இலங்கை மின்சார சபையில் கடமையாற்றும் அனைவரும் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் பணியாளர் தொகுதிக்குள் உள்ளடக்கப்படுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் காலங்களில் மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டங்களை மேற்கொள்வது சட்டவிரோதமானதாக கருதப்படும்.

இதேவேளை இந்தத் தீர்மானம் தொடர்பில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் இதுவரையில் எவ்வித கருத்தினையும் வெளியிடவில்லை. (ஸ்ரீ-2)

## செங்கல்பட்டு முகாமிலுள்ள இலங்கை அகதிகள் 13 பேர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர்கள் என சந்தேகப்படும் இலங்கை அகதிகள் 41 பேரை தமிழக பொலிஸார் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்களின் வழக்குகளும் விரைந்து நடைபெறாத நிலையில் இவர்கள் குடும்பங்களைப் பார்க்க கூட அனுமதிக்கப்படுவதில்லை.

இவர்கள் நீண்டகாலமாக தங்கள் மீதான வழக்குகளை விரைந்து நடத்தக் கோரி போராட்டங்களை நடத்துவதோடு தங்களை தங்களின் உறவினர்களோடு சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு போராடி வந்தனர்.

இந்நிலையில் இங்கு அடைக்கப்பட்டுள்ள அகதிகளில் 13 பேர் கடந்த மூன்று நாட்களாக சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டு வர அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் அவர்களின் போராட்டம் மூன்றாவது நாளாக தொடருகிறது. (ஸ்ரீ-2)

## இராணுவத்தின் தகவல் பரிமாற்றத்திற்காக பிரத்தியேக குரல்-தரவு வலையமைப்பு


(கொழும்பு)

இராணுவத்தின் பல்வேறு பணியகங்கள், படைப்பிரிவு தலைமைகளுக்கிடையிலான தகவல் பரிமாற்றத்திற்காக பிரத்தியேகமான குரல், தரவு வலையமைப்பைப்பொன்றை இராணுவம் ஸ்தாபித்துள்ளது.

இராணுவத்தின் 30 இற்கும் மேற்பட்ட பிரிவுகளின் தலைமையகங்கள், கிளைகள், 6 பாதுகாப்பு படைகளின் தலைமையகங்கள், 14 படைப்பிரிவுகள் மற்றும் 22 பிராந்திய தலைமையகங்கள் ஆகியவற்றை இணைக்கும் விதமாக இவ்வலையமைப்பு அமைந்துள்ளது.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய இராணுவத் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை இவ்வலையமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இலங்கையின் மிகவும் பாதுகாப்பான வலையமைப்புகளில் ஒன்றாக இதை பேணுவதற்காக அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




இலங்கை வங்கியின் சாவற்கட்டு நடமாடும் சேவையின் ஆரம்ப விழா கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. இதில் இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் சுமணசிறியினால் வாடிக்கையாளர் ஒருவருக்கு வைப்பு புத்தகம் வழங்கப்படுவதையும் அருகில் இலங்கை வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மா, காசாளர் நிசாந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மற்றொரு கோணம்



## விதவிதமான பழக்கங்கள் வாழ்க்கைக்கு வண்ணம் சேர்க்கின்றன

**எந்த மதமும் தன்னை வருத்திக் கொண்டு, கடவுளை வணங்க வேண்டும் என்று சொல்லவில்லை. இந்துக்கள் மட்டும் தலையில் தேங்காய் உடைத்தல் தீ மிதித்தல் போன்றவற்றில் ஈடுபடுவது ஏன்?**

நீங்கள் நினைப்பது போல் இல்லை, இந்தப்பழக்கம் வேறு சில மதங்களிலும் உண்டு. இந்துக் கலாசாரத்தில் ஒரு மனிதனின் அடிப்படையான வாழ்க்கையின் நோக்கம் முக்தி அடைவதுதான். இந்தக் கலாசாரத்தில் நீங்கள் பிறந்துவிட்டால்,

### ஆன்மீகம் 35

உங்கள் தொழில், உங்கள் குடும்பம், உங்கள் கடவுள் எல்லாமே இரண்டாம் பட்சம்தான். முதல் நோக்கமும் -முக்கிய நோக்கமும் உங்கள் விடுதலைதான். ஆகவே மனிதன் தன்னுடைய உடல், மனம், தான் வாழ்கிற சமூகம் அனைத்தையும் இந்த விடுதலைக்கு உதவியாகவும் கருவியாகவும் பயன்படுத்த வேண்டியவனாகிறான்.

இதற்கு முக்கியமான தடையாக இருப்பது தன்னுடைய உடம்போடு மனிதனுக்கு இருக்கிற அடையாளம் தான். அந்த அடையாளத்தைத் தாண்ட இந்தக் கலாசாரத்தில் பலவிதமான கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் தியானம் மிக மென்னையான, சூட்சுமமான கருவி. ஆணியில் படுத்துக்கொள்வது, தீயில் நடப்பது போன்றவையெல்லாம் மிகவும் கடினமான கருவிகள். பலவிதமான மனிதர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருவியை பயன்படுத்துகிறார்கள். தீயில் நடந்தால்தான் நீங்கள் இந்து என்று யாரும் சொல்வதில்லை. பல்வேறு மனிதர்கள் விதம் விதமான பழக்கங்களை உருவாக்கினார்கள். அவற்றில் சில இன்று பொருந்தாமல் இருக்கலாம். அதற்காக எல்லாவற்றையும் மாற்றி ஒரே விதமாக கொண்டுவர வேண்டுமென்று நினைக்காதீர்கள். விதம் விதமான பழக்கங்கள் வாழ்க்கைக்கு வண்ணம் சேர்க்கின்றன. எல்லா இடங்களிலும் ஒரேவிதமாக அனைத்தும் இருந்தால் வாழ்க்கை யின் உயிர்ப்பு காணாமற் போய்விடும். அவரவர் விருப்பங்களிற்கு ஏற்ப சில வழக்கங்களை பின்பற்றுவதில் எந்தத் தவறும் இல்லை.

**ஒருவர் திருநீறு பூசினால் அவருக்கு கடவுள் பக்தி அதிகமாக உள்ளது என்று அர்த்தமா?**

நீங்கள் வெளியூரிலோ, வெளிநாட்டிலோ வசிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் அப்பா அம்மாவின் புகைப்படங்களை பெரிதாக வீட்டில் மாட்டிவைத்திருக்கிறீர்கள். இவ்வளவு பெரிய புகைப்படம் வைத்திருக்கிறீர்களே, அவ்வளவு அன்பா? என்று கேட்டால் என்ன பதில் சொல்வது. ஒரு மனிதன் தன் அன்பை வெளிப்படுத்த எவ்வளவோ வழிகளைப் பின்பற்றுகிறான். அதில் புகைப்படம் மாட்டி வைப்பதும் ஒன்று. அதுபோல் தன் பக்தியை மனிதன் எவ்வளவோ வழிகளில் வெளிப்படுத்துகிறான். அதில் திருநீறு பூசவதும் ஒன்று.

திருநீறு பூசுவதற்கென்று விஞ்ஞான பூர்வமான காரணங்கள் உண்டு. ஒரு மனிதனின் கிரகிக்கிற தன்மையை மேம்படுத்த திருநீறு பூசுவது பெரிதும் உதவுகிறது. இந்த வாழ்க்கையை பல விதங்களில் கிரகித்து உள்வாங்க முடியும். காமமாகவோ பக்தியாகவோ வெவ்வேறு நிலைகளில் மனிதர்கள் வாழ்க்கையைக் கிரகித்துக் கொள்கிறார்கள். உயர்ந்த தன்மையில் வாழ்க்கையின் அம்சங்களைக் கிரகிக்கும் பொருட்டு நெற்றி, கழுத்து போன்ற சில இடங்களில் திருநீறு பூசுவது விஞ்ஞான பூர்வமான அடிப்படையில் உருவான பழக்கம். காலப்போக்கில், ஒரு துளி திருநீற்றை வைக்கச் சொல்லும் இடத்தில் நிறையப்பூசிக் கொள்வது என்பது பழக்கமாகிவிட்டது, என்றாலும் திருநீறு பூசுகின்ற சம்பிரதாயம் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் நிகழ்வதாகும்.


ஈஷா உள்நிலை விஞ்ஞான நிறுவனம்-ஐக்கிய அமெரிக்கா

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண் மொழி

06

### உணர்வு நிலை வெளிப்பாடு

அகப்பாடல்களில் பரத்தைக் கூற்றாக அமைந்த பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள பெண் மொழி தத்துவமானது, சங்கப் பாடல்கள் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்துள்ளது. பல பாடல்கள் அதனை பதிவு செய்துள்ளன. ஆனால், குறுந்தொகையில் பெண்பாற் புலவர் பாடிய பாடல்களில் இரு பாடல்கள் மட்டுமே பரத்தமை பற்றிப் பேசுகிறது. பரத்தைக் கூற்றாக அமைந்த பாடல் பெண் மொழியின் பிறிதொரு இயல்பைப் புலப்படுத்தி நிற்கிறது. வீச்சான சொற் பயன்பாடு பாடலிற் தனித்துவம் பெற்றுள்ளது.

"கூந்தலாம்பன் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாம்ஃ தயர்கஞ் சேறுந்தானஃ
தஞ்சுவ துடைய ளாயிவெம்போர்
நுகம் படக் கடக்கும் பல்வே லெழினி
முலையான் பெருநிரை போலக்
கிளையொடுங் காக்கதன் கொழுநன் மார்பே"

இப்பாடல் பரத்தையின் துணிவான செயற்பாடு, மொழிநடையில் புலப்படுவதை வெளிப்படுத்தி நிற்கிறது. புனல் விளையாட்டுத் தலைவனை பரத்தை அழைத்துச் செல்லும் போது அதனை தலைவியால் தடுக்க முடிந்தால் தடுக்கட்டுமென பரத்தை சவால் விடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. பரத்தையின் கவின் பற்றிக் கூறும் பெண் மொழிப் பயன்பாடு இங்கு கவனத்துக்குரியது. ஆம்பற் பூவைக் கூந்தலிலே சூடிச் செல்லும் பாங்கு பரத்தைக்கு தனது கவர்ச்சி ஆற்றலில் முழு நம்பிக்கை உள்ளது. அந்தக் கவர்ச்சியில் மயங்கிக் கிடக்கும் தலைவனை தலைவியால் மீட்டெடுக்க முடியாது என்று எண்ணிப் பேசுகிறாள். ஒரு பெண் தனக்கு உரிமையில்லாத ஆணுடன் வாழும் நிலை பற்றிக் குறிப்பிடும் பாடல் பரத்தையின் குண இயல்பை மொழி நடையால் நன்கு உணர்த்துகிறது. "கிளையொடும் காக்க தன் கொழுநன் மார்பே" என்ற தொடரில் பரத்தையின்

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

முழுமையான உணர்வுநிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தலைவன் தன்னுடைய விருப்பப்படியே நடப்பான் தலைவியின் விருப்பப்படி நடக்கமாட்டான் என உறுதியாகச் சொல்கிறாள்.

இதேபோன்று தோழி, பரத்தமை ஒழுக்கம் பூண்ட தலைவனை தெருட்டுகின்ற நிலையும் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒக்கூர் மசாத்தியார் என்னும் புலவரது பாடல் இதனை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

"மனையுறை தோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின மாலையுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇய
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
கின்னா திசைக்கு மம்பலொடு
வாரல் வாழியரைய வெந் தெருவே" (பாடல் 139)

தன்னால் பாதுகாக்கப்படும் பிள்ளையை காட்டுப்பூனை கவர்ந்து சென்று விடுமோ என்னும் அச்சத்தினால் கோழிப்பேடை கூவுவது போல பரத்தையும் தன்னோடு இருந்த தலைவனை தலைவி தன்னோடு இருத்திக் கொள்வாளோ என்ற அச்சத்தினால் தலைவனுக்கு பல பழிமொழிகளைக் கூறுவர். அதனால் நீ இங்கே வரவேண்டாம் எனத்தோழி தலைவனிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இங்கு இன்னொரு செய்தியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தலைவன், தலைவியின் வீட்டிற்கு வரும்போது ஊராரும் பழிச்சொல் கூறுவர். அதனால் "எம் தெரு வாரல்" எனத் தோழி கூறுகிறாள். இயற்கை நிலையான ஒரு காட்சியை உவமையாகக் கூறிநிற்கும் இப் பெண் மொழிப் பயன்பாடு தனித்துவமாகவுள்ளது. பெண், ஊரார் தன் கணவன் மீது பழி கூறுவதால் மிக்க வருத்தம் அடைவாள். எனவே நீ அவளை அத்துன்பத்திற்கு ஆளாக்காமல் இத்தெருப்பக்கமே வராதே எனத் தோழி தன் தனித்துவமான மொழி நடையிலே பண்பாக எடுத்துரைப்புச் செய்கிறாள்.


### நயமாக எடுத்துக்கூறும் பாங்கு

தோழி பெண்மொழி விடயங்களை எடுத்துக்கூறுவதில் ஒருநயத்தக்க நாகரிகம் உடையதாக உள்ளது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உள்ள அந்தரங்கமான தொடர்பை அறிந்தவள் தோழி. அதனால் இருவரையும் இணைத்து வைப்பதில் குறியாகப் பணியாற்றுகிறாள். வெள்ளிவீரியார் என்னும் பெண்பாற் புலவர் பாடிய பாடலொன்றை எடுத்துக்காட்டலாம்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
முன்னை நாள் ஆய்வாளர்
ஜப்பான்-கக்குசுயின் பல்கலைக் கழகம்**

"சுரஞ்சொல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே"

(தொடரும்)




சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையமானது கடந்த 4 ஆம் திகதி மீண்டும் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதி செயலாளர் பா. கஜதீபன் உரையாற்றுவதையும் அருகில் வலி.தெற்குப் பிரதேசசபை தவிசாளர் தி.பிரகாஷ், வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன், வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர் வில்லியம் ஜேசுதாஸ், தமிழரசுக் கட்சியின் பிரமுகர் க.பிருந்தாபன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் புகலிடம் சீனப் பிரஜை கோரிக்கை

(கொழும்பு)

விசா இல்லாமல் தங்கியிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜையொருவர் தான் இலங்கையில் புகலிடம் கோரியுள்ளதாக நீதிமன்றில் நேற்று முன்தினம் அறிவித்தார்.

சீனாவின் சோங்கிங் பிராந்தியத்தைச் சேர்ந்த பான் ஜுன் எனும் இந்நபர் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்திலும் தன்னை பதிவுசெய்துள்ளார். இவர் கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது இவரின் புகலிடக் கோரிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை நீதிவான் நாடினார். எனினும் சந்தேக நபரை செப்டெம்பர் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

மேற்படி சீனப் பிரஜை கொழும்பு-2 கங்காராம விகாரைக்கு அருகில் திரிந்த போது குடிவரவு குடியகல்வு விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கொம்பனித்தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் செல்லுபடியான விசா இல்லாமல் இலங்கையில் தங்கியிருந்ததாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கொம்பனித் தெரு பொலிஸாருக்கு அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் கடிதமொன்றை அனுப்பியுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பாக இந்த உயர்ஸ்தானிகராலயத்திற்கும் இலங்கை வெளிவிவகார அமை[illegible] இடையில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தை நீதிமன்றில் முன்வைக்குமாறு பொலிஸாரிடம் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் கோரியுள்ளது. (ச-5)

# சுனாமி எச்சரிக்கை கோபுரம் பரீட்சிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆறு சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களையும் பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வாகரை, களுவண்கேணி, கோட்டைக் கல்லாறு, கல்லடி, கற்குடா, காத்தான்குடி ஆகிய 6 பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை கோபுரங்களும் நேற்று பரீட்சார்த்தமாக ஒலித்தன.

இக்கோபுரங்கள் எச்சரிக்கை ஒலி எழுப்பும் போது மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத்தேவையில்லை என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஏற்கனவே அறிவித்திருந்தது.

கோபுரங்களின் இயங்கும் தன்மையை பரீட்சித்துப் பார்ப்பதே இதன் நோக்கமாகுமெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 52 முன்னெச்சரிக்கைக் கோபுரங்களும் இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஹக்கீமுக்கு எதிராக உண்ணாவிரதம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை பீடத்திற்கு எதிராக கல்முனையில் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கல்முனை இஸ்லாமாபாத் மக்களினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கல்முனை மாநகரசபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்த வேட்பு மனுவில் இஸ்லாமாபாத் பிரதேசத்தைச் சேர்ந்த பீ.ரி. உதுமாலெப்பை எனப்படும் ஜமால் வெற்றியீட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நிறுவுநர் நினைவுநாளும் நினைவுப் பேருரையும் வாழ்வகத்தில் எதிர்வரும்11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.45 மணிக்கு வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கமும், சிறப்பு அதிதிகளாக ச.ஞானகணேசன், திருமதி வேணுகா சண்முகரத், ஆ.இராஜசிங்கம் கலந்து கொள்கின்றனர்.

கௌரவ விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கலந்து கொள்கின்றார். *மாற்று ஆற்றலுடையோரின் சட்ட உரிமைகள்* எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராசா நிகழ்த்தவுள்ளார். (ச-9)

# 2011.09 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1796-பிரெஞ்சுப் படையினர் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்தனர்.

★ 1831-4 ஆம் வில்லியம் பிரித்தானியாவின் மன்னனாக முடிசூடினான்.

★ 1900-டெக்சாசை சூறாவளி கால்வெஸ்டன் தாக்கியதில் 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1923-கலிபோர்னியாவில் 7 அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் மூழ்கின.

★ 1930-ஸ்கொட்ச் நாடா முதன் முதலாக விற்பனைக்கு விடப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போரில் லெனின் கிராட் நகரை ஜேர்மனி முற்றுகையிட்டது.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: வி2 ரொக்கெட் மூலம் முதல் தடவையாக லண்டன் நகரம் ஜேர்மனியினால் தாக்கப்பட்டது.

★ 1945-சோவியத் படைகள் வட கொரியாவை ஒரு மாதத்திற்கு முன்னர் கைப்பற்றியமைக்குப் பதிலடியாக அமெரிக்கப் படைகள் தென் கொரியாவில் தரையிறங்கின.

★ 1951-பசுபிக் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு 48 நாடுகள் சான் பிரான்சிஸ்கோவில் ஜப்பானுடன் அமைதி உடன் படிக்கையை ஏற்படுத்தின.

★ 1959- ஆசியத் தொழில்நுட்பக் கழகம் பாங்கொக் நகரில் நிறுவப்பட்டது.

★ 1991-யூகொஸ்லாவியாவிடம் இருந்து மசடோனியக் குடியரசு விடுதலை அடைந்தது.

★ 2006-ஆப்கானிஸ்தான், காபூலில் அமெரிக்கத் தூதரகத்தின் முன் நடத்தப்பட்ட மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 2 அமெரிக்க வீரர்கள் உட்பட 16 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மாலேகான் நகரில் மசூதி மற்றும் சந்தைப் பகுதிகளில் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்களில் 40 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

## பிறப்பு

★ 1913-ஆர்.மகாதேவன், தமிழக நகைச்சுவை எழுத்தாளர் (இ.1957)

## இறப்புக்கள்

★ 1980-வில்லார்ட் ஃபிராங்க் லிப்பி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1908)

★ 1995-நா.முத்தையா,ஆத்மஜோதி இதழாசிரியர் (பி.1918)

## சிறப்பு நாட்கள்

★ மசடோனியக் குடியரசின் சுதந்திர தினம் (1991)

★ உலக எழுத்தறிவு தினம்


★ அன்னை வேளாங்கண்ணி தேர்த் திருவிழா



★ 2008-குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் (பி.1935)

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!

காசி ஆனந்தனின் அதிரடித் தொடர் 7





கங்கை கொண்டான்-கடாரம் வென்றான்- சிங்களம் அடக்கினான் என்றெல்லாம் பேசுவதைவிட்டு இமயம் விட்டோடினான்-வேங்கடத்தைப் பறிகொடுத்தான்-சேரநாடு இழந்தான்-சிங்களத்தால் அழிந்தான் என்று பேசுங்கள்-தமிழினக் கண் திறக்கும்.

வீழ்ச்சியை ஒப்புக் கொள்ளுங்கள்- எழுச்சி வரும். அடிமைத்தனத்தை ஒப்புக் கொள்ளுங்கள்- விடுதலை வரும்.

இலங்கைத்தீவு முழுவதும் தமிழர் தாயகமாக இருந்த காலம் ஒன்று; கி.பி 800 இல் சிங்கள மொழியும் இனமும் தோன்றிய பின்பு இலங்கைத் தீவு சிங்களவர் தாயகம்- தமிழர் தாயகம் என இரு தாயகங்களைக் கொண்ட நாடாக மாறிய காலம் ஒன்று.

இலங்கைத் தீவுக்கு முதன் முதல் வந்த வேற்று நாட்டாரான போர்த்துக்கீசர் கி.பி1505இல் இலங்கையில் கால் வைத்த போது இலங்கைத்தீவு இரு தாயகங்களைக் கொண்ட நாடாகவே இருந்தது. சிங்களவர்களின் தாயகத்தைக் கைப்பற்றி முடித்து-நீண்டகாலப் போரின் முடிவில்-பெரும்பாடு பாட்டுத்தான் 1619இல் போர்த்துக்கீசரால் தமிழர் தாயகத்தைக் கைப்பற்ற முடிந்தது. இந்த வரலாற்றுச் செய்தி தமிழர் வீரத்தின் போர் ஆற்றலின் சிறப்பை எடுத்துக் காட்டும்.

1658இல் டச்சுக்காரர்கள் வந்தார்கள்- 1795 இல் ஆங்கிலேயர்கள் வந்தார்கள். இரு நாடுகளாகவே -இரு நிர்வாகங்களாகவே அவர்களும் இலங்கைத் தீவை ஆண்டார்கள்.

1833இல் நிர்வாக வசதியின் பொருட்டு -சிங்களவர், தமிழர் தாயகங்கள் இரண்டையும் இணைத்து, ஒரே நாடாக ஆக்கும் நோக்கோடு-கோல்புறூக் எனும் ஆணையாளரை பிரிட்டிஷ் அரசு இலங்கைத் தீவுக்கு அனுப்பி வைத்தது. அப்போது, தமிழர் தாயகம் 26500 சதுர கிலோமீற்றர் என்று கோல்புறூக் குறிப்பிடுகிறார்.

காலம் ஓடுகிறது...

1901-இல் இலங்கைத்தீவை பிரிட்டிஷ் அரசு நிர்வாக செயற்பாட்டு எளிமை கருதி, 9 மாகாணங்களாகப் பிரிக்கிறது. சிங்களவர்களுக்கு 7 மாகாணங்கள்-தமிழர்களுக்கு 2 மாகாணங்கள். வடக்கு மாகாணமும்-கிழக்கு மாகாணமும். இந்த இரு மாகாணங்களின் நிலப்பரப்பு 26,500 சதுர கிலோ மீற்றர் ஆக இருந்திருக்க வேண்டும். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளரை சிங்களவர்கள் வளைத்து-தமிழர் தாயகத்தில் 7500 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைப் பிடுங்கி-சிங்களவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 7 மாகாணங்களோடு இணைத்தார்கள். அன்றே தமிழீழத் தாயகத்தில் 7500 சதுர கிலோ மீற்றர் மண்ணை நாம் இழந்து விடுகிறோம்.

காலம் ஓடுகிறது....

1948இல் பிரிட்டிஷ் ஆட்சி இலங்கைத் தீவில் முற்றுப்பெறுகிறது. 1976 இல் இனி எங்கள் கொள்கை தனித் தமிழீழ அரசு தான் என்று தந்தை செல்வா அறிவிக்கிறார்.

ஏனெனில் இடைப்பட்ட 27 ஆண்டுகள் காலத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் திட்டமிட்டு சிங்களவர்களை தமிழீழத்தில் குடியேற்றி-தமிழீழ மண்ணில் மேலும் 7500 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பை தங்கள் மண்ணாக்கிக் கொண்டனர்.

ஆக, 1976-இல் தமிழீழம் 11500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு நிலமாகச் சுருங்கிற்று.

11500 சதுரகிலோமீற்றராகச் சுருங்கித் தேய்ந்து நின்ற தமிழீழத்தில் தான் பிரபாகரன் ஆயுதப் போரைத் தொடங்கினார்.

பிரபாகரன் ஆயுதப்போர் புரிந்த 33ஆண்டுகள் (1976-2009) போராட்டகாலகட்டத்தில் தமிழீழத்தில் ஒரு அங்குல மண்ணைக்கூட சிங்கள ஆட்சியாளரால் பறிக்கமுடியவில்லை.

இன்று நிலை என்ன? முள்ளிவாய்க்காலுக்குப் பின் கடந்த இரண்டு ஆண்டுகள் தமிழீழ மண்ணில் பழையபடி சிங்களவர்களைக் குடியேற்றி தமிழர் தாயகத்தை முற்று முழுதாக அழித்தொழிக்கும் இன அழிப்பு நடவடிக்கையை சிங்கள அரசு முழு வீச்சில் முடுக்கி விட்டுள்ளது.

சிங்களப் படையினர் குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் 40,000 வீடுகள் கட்டப்பட்டு வருவதாகச் சொல்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

முறிகண்டியில் 5000ஏக்கர் நிலத்தில் சிங்களவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட இருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சொல்கிறார்.

46 சிங்கள மீன்பிடி முதலாளிகள் முல்லைத்தீவு கடற்கரையில் -ஒவ்வொருவரும் 200 சிங்கள மீனவர்களோடு குடியேறி இருப்பதாகவும் - தமிழ் மீனவர்களின் 'கரைவலை' மீன்பிடி நீரிமை பறிக்கப்பட்டு சிங்கள மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் சொல்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

மட்டக்களப்பில் 1500 ஏக்கர் நிலம் சிங்களவர் குடியேற்றத்துக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அழுகிறார்.



## வீழ்ச்சியை ஒப்புக்கொள் எழுச்சிவரும் அடிமைத்தனத்தை ஒப்புக்கொள் விடுதலைவரும்

அப்படி ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கதைகள்...


சிங்களவர் குடியேற்றம் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் தமிழீழத் தேசிய இனம் சிதைந்தழிந்து போகும் என்பது மட்டும் உண்மை.

தமிழீழம் இழந்த 15,000 சதுரகிலோமீற்றர் நிலப் பரப்பை மீட்டுத் தருவதும் - பறிகொடுத்தது போக இன்றிருக்கும் 11,500 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பைப் பாதுகாப்பதும் உலகத் தமிழினத்தின் தலையாய கடமையாகும்.

'இருப்பாய் தமிழா நெருப்பாய்' என்று ஏன் எழுதினேன்?- இப்போது புரிகிறதா?


(பொறிபறக்கும்)

# நவீன எண் சோதிடம்




## எதிலும் முன்னெச்சரிக்கையுடையவர்கள் யாரையும் எளிதில் நம்பமாட்டார்கள் 40

### உடல் எண் 5 உயிர் எண் 2



5,14,23 போன்ற தேதியில் பிறந்து, தேதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் புதன் சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்கு குறைவான உயரத்துடன் அழகாகக் காட்சியளிப்பர். எப்பொழுதும் ஏதாவது ஒரு சிந்தனையிலேயே இருப்பர். பற்கள் வரிசையாகவும் பளபளப்பாகவும் காட்சியளிக்கும். சுறுசுறுப்பாக இயங்கும் இவர்கள் திடீரென்று சோம்பல் நிலைக்கு வந்துவிடுவர். இவர்களுக்கு பெயர் பிறந்த தேதிக்கு பொருத்தமானதாக அமையாவிட்டால், நன்றாக இருக்கின்ற போதே பல குழப்பங்கள் வந்து நீங்கும். பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால், தான் செய்கிற உத்தியோகத்திலும் தொழிலிலும் உயர்ந்த நிலையை அடைவர்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

எதிலும் முன்னெச்சரிக்கை கொண்டு இவர்கள் யாரையும் எளிதில் நம்பமாட்டார்கள். தானே ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு முயல்வர். பிடிவாதக்குணம் கொண்ட இவர்கள் தான் எதைச் செய்தாலும் வேகமாக முடிக்க வேண்டுமென்று போராடுவர். உடற்பலம் மிகுந்தவர்போல் காட்சியளிக்கும் இவர்கள் மனபலம் குறைந்தவர்களே. இவர்களது மனநிலை திடமாகவும் சில நாட்கள் பல வீனமாகவும் மாறி மாறி செயல்படும். இதனால் சிலருக்கு முன் கோபம் வரும். வெளியில் ஒரு காரியம் நடக்காவிட்டால் வீட்டில் உள்ளவரை திட்ட ஆரம்பிப்பர். பெயர் பொருத்தமாக அமைந்தவர்கள் எப்பொழுதும் நல்ல ஆரோக்கியம், வீடு, நிலம், தொழில், உத்தியோகம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள் பெற்று வாழ்கின்றனர். வழக்கு தொடர்வதிலும், அதைத் தீர்ப்பதிலும், குறுக்குக் கேள்வி கேட்பதிலும், வாதம் செய்வதிலும் கைதேர்ந்தவர்கள். இவர்களது மனம் உயர்ந்த மலைப் பிரதேசங்களையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டுகளிக்க ஆசைப்படும். வீட்டை அழகாக வைத்துக் கொள்வதிலும் ஆடம்பாப் பொருட்கள் வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் உள்ளவர்கள். கற்பனை சக்தி அதிகம் கொண்ட இவர்கள் ஒரு பொருளைப் பார்த்த [illegible] அதைப்பற்றி ஆராய்ச்சியில் இறங்கிவிடுவர். சிலர் எழுதுவதாலும், பேசுவதாலும் புகழடைவர். எப்பொழுதும் நூதனமான பொருட்களைப்பற்றி ஆராய்ச்சி வந்து கொண்டு இருக்கும். பிறருக்கு யோசனை கூறி, பிறரைக் கவரக் கூடிய காந்த சக்தி உள்ளவராகவும், சீர்திருத்தவாதியாகவும் விளங்குவர். பழமையும், புதுமையும் கலந்த வாழ்க்கை நடத்தும் கொள்கை கொண்டவர். பேச்சாற்றல் கொண்ட இவர்கள் சிலநேரங்களில் மௌனமாகவே இருந்து விடுவர். சட்டம், சமயம், வைத்தியம், தத்துவம், கலை போன்றவற்றில் ஆர்வம் இருக்கும். இவர்களுடைய பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக பெயர் அமைந்து விட்டால் வாழ்க்கையில் உயரந்த இடத்தை வகிப்பர்.

**தொழில்**

இவர்களுக்கு கமிஷன், கான்ட்ராக்ட், அழகு சாதனங்கள், ஆடம்பரப்பொருட்கள், எலக்ட்ரிக், இரும்பு சம்பந்தமான தொழில் அமைந்தால் பெரும் இலாபத்தைப்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

பெறும் பாக்கியம் உண்டாகும்.

**நோய்**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு அடிக்கடி சளி பிடித்தால், ஆஸ்துமா சம்பந்தப்பட்ட நோய்கள், இரத்தக் கொதிப்பு, பைல்ஸ், வயிற்றுக் கோளாறு போன்றவைகள் வர வாய்ப்பிருப்பதால் முன் கூட்டியே பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

புதன், சந்திரன் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு புதன் ஆதிக்கமாகிய 14,23,32,41,59,77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 5,7

யோகமான தேதிகள்- 5,14,23, 7,16,25

யோகமான மோதிரக்கல்- வைரம், ஜிர்கான், டைகர்ஸ் ஐ, மூன்ஸ், டோன்

யோகமான நிறம்- சாம்பல் நிறம்,வெளிர் பச்சை,வெளிர் நீலம்

ஆகாத நிறம்- சிவப்பு மட்டும்


ஆகாத தேதிகள்-9,18,27

* * *

### பெயர் எண்களின் பலன்

**16 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்களுக்கு தெய்வீக அருள் விருத்தியாகும். நாளுக்கு நாள் முன்னேற்றம் கூடிக் கொண்டே போகும். திடீரென்று வாழ்க்கை முடியும் சூழ்நிலை உண்டாகும். ஆனால், தெய்வீக அருள் பெற்ற இவர்கள் தினமும் கடவுளைப் பூஜிப்பதால் தனக்கு வரும் கெடுதலிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இதற்கு உதாரணம் மார்க்கண்டேயனுடைய 16 வயதில் எமன் பாசக் கயிறு வீசியும் சிவபெருமானை அனுதினமும் வணங்கியதால் என்றும் 16 வயதாக வாழும் வரம் பெற்றான் என்பதைப் புராணக் கதைகள் மூலம் நாம் அறிவோம். ஆனால், தெய்வீக அருள் குறைந்தவர்கள் கண்டிப்பாக மேலிருந்து கீழ் நிலைக்கு வந்துவிடுவர்.



2,11,20,29 போன்ற தேதியிற் பிறந்தவர்களுக்கு இந்த எண் வளர்ச்சியைக் கொடுக்கும்.

**17 எண் பலன்**

சூரியனாகிய 1ம், கேது வாகிய 7ம் சேர்ந்து 8 என்ற சனி வருவதால், பல்வேறு சோதனைகளையும் பல கெட்ட பெயர்களையும் சந்திக்க நேரும். ஆனால் விடா முயற்சியால் போராடி ஒரு நல்ல அனுபவமிகுந்த சக்தி படைத்தவர்களாகவும்,அதிகமான பொருளைச் சேர்ப்பவராகவும், இந்த உலகம் தன்னை மறக்காத அளவிற்கு வீர, தீரச் செயல் செய்பவராகவும் விளங்குவர்.

**18 எண் பலன்**

1என்ற சூரியனும், 8என்ற சனியும் சேர்ந்து 9 செவ்வாய் வருவதால், இந்த எண்ணிக்கையில் பெயர் அமைத்துக் கொண்டவர்களை, நேர்மைக்குப் புறம்பான காரியங்களில் இறக்கி விடும். அமைதிக்குறைவால், மது, மங்கை, சூது போன்ற பழக்கங்களுக்கு அடிமையாக நேரிடலாம். சண்டை, சச்சரவும் சதா இவர்களை வந்து சேரும். கோர்ட்டும் வழக்கும் ஆயுதங்களை ஏந்தித்திரியும் சூழ்நிலையும் உருவாகும். தன் படிப்பையோ தன் வேலையையோ, தன் தகுதியையோ இழந்து, பரதேசம் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். இவர்களுடைய குறிக்கோள் எவருக்கும் பயன்படாது. இவர்கள் திட்டங்கள் வெற்றி பெற்றாலும் இவர்களுக்கும் பயன்படாது. அழிந்து போகும். இராமருக்கும், இராவணனுக்கும் இடையில் 18 மாதங்கள் போர் நடந்த நிகழ்ச்சியை இராமாயணத் தின் மூலம் நாம் அறிவோம். 18 திங்கள் நடந்த போரில் சீதையை மீட்டும், சேர்ந்து வாழாமல், மீண்டும் பிரிந்ததை கதையின் மூலம் நாம் அறிவோம். இதனால் 18 எண் சிறந்ததாக கருதப்படவில்லை.

(தொடரும்)

# அலைதிரண்ட தமிழ் உணர்வாளர்களால் உணர்ச்சிப் பிழம்பான உயர்நீதிமன்றம்

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரை வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி தூக்கில் இடக் கூடாது என தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம், தீக்குளிப்பு போராட்டம் என அனல் பறக்கிறது

அதிலும், காஞ்சிபுரத்தில் செங்கொடி என்ற இளம்பெண் மூவரின் தூக்குத் தண்டனை இரத்து செய்யக் கோரி தீக்குளித்து இறந்த சம்பவம் மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பெரும் ஆவேசத்தைக் கிளப்பியிருக்கிறது.

போராட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும், தூக்குத் தண்டனையை நிறுத்தி வைக்க சட்டரீதியான வழிகளைக் கையாண்டனர் பழ. நெடுமாறன், வைகோ, சீமான் உள்ளிட்டவர்கள். நீண்ட ஆலோசனைக்குப் பிறகு டில்லியில் பிரபல சட்ட வல்லுனரும், மாநிலங்களவை உறுப்பினருமான ராம்ஜெத்மலானியைச் சந்தித்தார் வைகோ.

எந்த அரசியல் கட்சி தலைவரையும் தன் வீட்டில் அழைத்துப் பேசும் நடைமுறையை ஜெத்மலானி இதுவரை கடைப்பிடித்ததில்லை.

முதன் முறை

அடுத்து, நீதிமன்றத்தின் முகப்பு வாசல் வழியாக ஜெத்மலானியுடன் வைகோவின் கார் நுழைய கூட்டம் ஆர்ப்பரித்தது.

"பதினொரு ஆண்டுகளாக மூவரின் கருணை மனுக்கள் நிலுவையில் இருந்துள்ளது. இதைவிடக் குறைவான கால அளவில் இருந்த கருணை மனுக்களின் அடிப்படையில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த மூவரின் தூக்கு தண்டனையை இரத்து செய்வதுதான் தமிழ்நாட்டில் நடக்கும் போராட்டங்களுக்கு மருந்தாக அமையும்" என ராம்ஜெத்மலானி சொல்ல, விசில் பறந்தது.

தமிழ் உணர்வாளர்கள் புடைசூழ நீதிமன்றத்துக்குள் நுழைந்தார் ஜெத்மலானி. எங்கு பார்த்தாலும் சாந்தன், முருகன், பேரறிவாளன் உருவம் பதித்த பனியன்களில் மூவரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்யக் கோரி ஆயிரக்கணக்கானவர்கள் கோஷம் எழுப்பினர்.

நீதிபதிகள் உள்ளே நுழைந்ததும், சரியாக 10.32 மணிக்கு வாதம் ஆரம்பித்தது. ஜெத்மலானி பேசும் போது, உச்சநீதிமன்றத்தில் கருணை மனு நிலுவையின் போது ஏற்பட்ட காலதாமதத்தைக்


சரியாக மூன்று நிமிடங்களுக்கு முன்பு நீதிமன்றிற்கு வெளியில் "மனித நேயம் வென்றது. வாழ்க புரட்சித் தலைவி ஜெயலலிதா" என்ற கோஷங்கள் விண்ணைக் கிழித்தது. பட்டாசு சத்தம் அதிர்வேட்டைக் கிளப்பியது. தீர்ப்பு வருவதற்குள் என்னவானது? என ஆச்சரியத்தோடு நீதிமன்றில் இருந்தவர்கள் திரும்பிப் பார்க்க, சட்டமன்றத்தில் தூக்குதண்டனை இரத்து செய்வது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா தீர்மானம் இயற்றிய செய்தி, தெரிய வந்தது. அடுத்த சில நொடிகளில் நான்காவது இருக்கை அதிர்ந்தது.

"இந்த வழக்கில் சட்டப் பிரச்சினைகள் இருப்பதாக நீதிமன்றம் கருதுகிறது. ராம்ஜெத்மலானி கூறியதைப் போல் 11 வருடங்கள் நான்கு மாதங்கள் கருணை மனு நிலுவையில் இருந்ததை நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது. எனவே, மூவரின் தூக்குத் தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்கிறோம். எட்டு வாரங்களுக்குள் மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டும்" என உத்தரவிட்

போக்கிய முதலமைச்சர் ஜெயலலிதா அம்மாவுக்கு நன்றி சொல்கிறேன். என் அப்பா மற்றும் இருவரின் தூக்குக்காக செங்கொடி இறந்ததை கேள்விப்பட்டு விடிய விடிய அழுதேன். அனைவரின் போராட்டமும் தான் இந்த வெற்றிக்குக் காரணம்" என ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

இது பற்றி பேசிய இயக்குநர் மணிவண்ணன், "முதல்வர் ஜெயலலிதா சட்ட மன்றத்தில் தீர்மானம் இயற்றியது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. மூவரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்யப் போராடியவர்களின் போராட்டத்திற்குத் தீர்வு கிடைத்திருக்கிறது. மூவரின் தண்டனை பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டு இருக்கிறது.

ஒன்பது வோல்ட் பற்றியை கடையில்



# நியாயமான போராட்டங்கள் எப்போதுமே வெற்றி பெறும்

செங்கொடி



ராம்ஜெத்மலானியுடன் வைகோ

யாக வைகோவை வீட்டிற்கு அழைத்துப் பேச்சு நடத்தினார். அவரும் மூவரின் தூக்குத்தண்டனையை எதிர்த்து வழக்காடப் போவதாக அறிவிக்க, மனித உரிமை ஆர்வலர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

ராம்ஜெத்மலானி சென்னையில் தங்கும் ஏற்பாடுகள் முழுவதையும் வைகோவே முன்னின்று செய்தார். 29 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் வேலைகள் முடிந்தது. 30 ஆம் திகதி தமிழ்நாடே எதிர்பார்க்கும் வழக்கு உயர்நீதிமன்றத்தின் நான்காவது கதிரையில் நீதிபதிகள் நாகப்பன், சத்தியநாராயணா முன்பு விசாரணைக்கு வந்தது. முன்னதாக, நீதிமன்றத்தின் பின்பக்க வாசல் வழியாக சீமான் வந்து சேர்ந்தார்.

இதன் பின்பு பழ.நெடுமாறன், இயக்குநர் மணிவண்ணன், ஓவியர் டாஸ்கி மருது மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பெரும் திரளாக குவிந்தனர்.

காரணம் காட்டி விடுதலை செய்யப்பட்டோரின் வழக்குகளைப் பட்டியல் போட ஆரம்பிக்க... கூட்டத்தின் சத்தம் அதிகரித்தது. ஒரு கட்டத்தில் எரிச்சலான நீதியரசர் சத்யநாராயணா, "வாதம் நடந்து கொண்டிருக்கிறது. அமைதியாக இருந்து கேளுங்கள். இல்லாவிட்டால் வெளியில் போங்கள்" என எச்சரித்தார். இதன் பின் சத்தம் குறைந்தது.

நீதியரசர்கள் தீர்ப்பு சொல்வதற்கு

டதுதான் அடுத்த அதிர்வுக்குக் காரணம்.

ஒரே நேரத்தில் உயர் நீதிமன்றமும், தமிழக அரசும் எடுத்த முடிவு மரண தண்டனைக்கு எதிரானவர்கள் மத்தியில் பெருத்த ஆரவாரத்தை ஏற்படுத்தி விட்டது. இந்த தகவல் லண்டனில் இருக்கும் முருகனின் மகள் ஹரித்திராவுக்கு தெரிவிக்கப்பட, "மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது என் அப்பாவுக்காக போராடியவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

ஒரு மகளின் வேதனையைப்

வாங்கியதற்காக பேரறிவாளனுக்குத் தூக்குத் தண்டனை கொடுத் திருக்கிறார்கள். இப்போது கமராவுக்கு பற்றி வாங்கப்போ என்று சொன்னால் கூட என் மகன் கடைக்குப் போக பயப்படுகிறான். நான் தான் செல்ல வேண்டியிருக்கிறது" எனச் சொன்னார்.

தீர்ப்பு வெளியானதும் பேரறிவாளனின் அக்கா, தங்கை இருவரும் அழுதபடியே, உயர் நீதிமன் றத்தின் கோபுரத்தை நோக்கி கை கூப்பி வணங்கினர்.

அற்புதம்மாளுக்கு சிறிதாக மயக்கம் வர உள்ளே அழைத்துச் சென்றனர். இந்த இருபெரு வெற்றிகளும் உண்ணா விரத மேடையில் இருந்த மூன்று வழக்கறிஞர்களுக்குத் தெரிவிக்

**ஜூனியர் விகடன்**

கப்பட அவர்களின் உண்ணா விரதமும் முடிவுக்கு வந்தது.

நியாயமான போராட்டங்கள் வெற்றிபெறும் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

# சுற்றுலா மேம்பாடு என்ற போர்வையில் நிலஅபகரிப்பில் ஈடுபடுகிறது அரசாங்கம்

## கொழும்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தின் வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக தமது வாழ்வாதாரங்களை விட்டு வெளியேற நேர்வதாகக் கூறி மீனவக் குடும்பங்களும் விவசாயிகளும் தொழிற்சங்க பிரதிநிதிகளும் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக, அரசாங்கம் புதிதாக முன்னெடுக்கின்ற பெரிய சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை இம்மக்கள் எதிர்க்கின்றனர்.

நாடெங்கிலும் சுற்றுலா மேம்பாடு என்ற பெயரில் நிலங்களை அதன் நியாயபூர்வ உரிமையாளர்களிடம் இருந்து அரசாங்கம் அபகரித்துவருகிறது என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

நாட்டின் மேற்குக் கரையை ஒட்டியுள்ள சிறுதீவுக்கூட்டம் ஒன்றை அரசாங்கம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுவதையும் அங்கு அவை 17 சொகுசு விடுதிகளைக் கட்டவிருப்பதையும் தேசிய மீனவர் ஒற்றுமை இயக்கம் என்ற அமைப்பைச் சேர்ந்த ஹெர்மன் குமார சுட்டிக்காட்டினார். தாங்கள் காலம் காலமாக பயன்படுத்தி வந்த நிலங்களை மீனவர்களும் விவசாயிகளும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆனால், தனது சுற்றுலா வளர்ச்சிக் கொள்கை சரிதான் என அரசு வாதிடுகிறது. யுத்தத்துக்குப் பின்னர் நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களில் சுற்றுலாத்துறை மிகவும் முக்கியமான இடம் வகிப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இலங்கைக்கு வருகின்ற சுற்றலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2016 ஆம் ஆண்டுக்குள் ஐந்து மடங்காக அதாவது இருபத்தைந்து இலட்சமாக உயர்த்த அரசாங்கம் விரும்புகிறது. இலங்கையின் இயற்கை அழகை வெளிநாடுகளில் இருந்து மக்கள் வந்து இரசிக்க வேண்டுமானால் அதிகமான விடுதிகள் தேவைதான் என்று சுற்றுலாத்துறையின் தலைவர் நாலக கொடஹேவா கூறுகிறார்.

நாட்டின் எதிர்கால பொருளாதாரவளர்சிக்கு சுற்றுலா மிகவும் அவசியமானதுதான். ஆனால், அரசாங்கத்தின் திட்டங்களை உள்ளூர் சமூகங்கள் சொல்வதுபோல அவர்களது வாழ்வாதாரத்தை பாதிக்காமல் முன்னெடுக்க முடியுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வியாகும். (ஸ்ரீ-2)

# உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள்

(கரவெட்டி)


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குக்குட்பட்ட 24 அணிகளுக்கிடையில் இடம்பெற்ற அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் அரை இறுதி ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இதில் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை நெடியகாடு அணியும் மற்றுமொரு அரை இறுதி ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்சேவியர் அணியும் மோதவுள்ளது.

(ஸ்ரீ-12-24)

# கோப் அறிக்கை வரவு, செலவுத் திட்டத்திற்கு முன் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு



நாடாளுமன்றப் பொதுக் கணக்கு தெரிவுக் குழுவின் (கோப்) அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட உள்ள வரவு -செலவுத் திட்டத்திற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அந்த குழுவின் தலைவர் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

228 அரசாங்க நிறுவனங்களில் 185 நிறுவனங்கள் தொடர்பான விசாரணை முடிவடைந்துள்ளதாகவும் மீதமுள்ள 43 அரச நிறுவனங்களின் விசாரணைகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு கோப் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர் அந்த அறிக்கையையும் இணைத்து புதிய அறிக்கை நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படும் என தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வடக்கில் 27 ஆயிரம் படையினரே நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் பாரியளவில் படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் உண்மையில் 27 ஆயிரம் படையினரே நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பெருமளவில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை அகழ்வதற்கு படையினர் காத்திரமான ஒத்துழைப்பினை வழங்கி வருவதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இராணுவம் கடற்படை மற்றும் விமானப் படை ஆகிய மூன்று படைகளையும் சேர்ந்த 27 ஆயிரம் படையினர் வடக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டின் பின்னர் படையினரின் அளப்பரிய பங்களிப்பின் காரணமாக இதுவரையில் நிலக்கண்ணி வெடியினால் எந்தவொரு உயிரும் காவுகொள்ளப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலய காணிகளை உரிமையாளர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கின் ஒட்டுமொத்த காணிப் பரப்பில் 3.5 முதல் 4வீதம் வரையிலான காணிகளே உயர்பாதுகாப்பு வலயங்களாக காணப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதனை தடுத்து நிறுத்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் தேசியப் பாதுகாப்பு மிகவும் முதன்மையானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# அவசரகாலச் சட்டம் இரத்தானதால் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பதவியும் வலுவிழக்கும்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பதவி சட்டரீதியானதா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவசரகாலச் சட்டம் இரத்து செய்யப்பட்டதன் மூலம் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பதவியும் வலுவிழக்கும் என சுட்டிக்காட்டியுள்ளார். பாராளுமன்றில் கைத்தொழில் முரண்பாடு குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகளின் 22 ஆம் சரத்தின் அடிப்படையில் புனர் வாழ்வு ஆணையாளர் நாயகம் பதவி நியமிக் கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். சட்டம் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் பதவியை மட்டும் எவ்வாறு நீடிப்பது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவசரகாலச் சட்டம் இரத்து செய்யப்பட்ட போதிலும் பின் கதவின் வழியில் நான்கு வர்த்தமானி அறிவிப்புக்களின் மூலம் சட்டத்தின் முக்கிய விடயங்களை தொடர்ந்தும் அமுல்படுத்த முயற்சிக்கப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

வர்த்தமானி அறிவிப்புக்கள் அரசாங்க இணையத் தளத்தில் வெளியிடப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# பாதுகாப்பு செயலாளர் வியட்நாமிற்கு விஜயம்

(கொழும்பு)


பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வியட்நாமிற்கு விஜயம் செய்துள்ளார். இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வியட்நாம் ஜனாதிபதி ட்ராவுன் தாங் சானுடன் பாதுகாப்புச் செயலாளர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கைக்கு வழங்கி வந்த ஆதரவுகள் வரவேற்கத்தக்கது என வியட்நாம் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையுடனான உறவுகளை மேலும் விஸ்தரித்துக் கொள்வதில் வியட்நாம் கூடுதல் நாட்டம் காட்டி வருவதாக அந்நாட்டு ஜனாதிபதி தாங் சான் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், திட்டமிடல் செயலாளர் கே.உமாகாந்தன் உட்பட வலயக்கல்விப்பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :என்.குமார்)

# டில்லி உயர்நீதிமன்ற வளாகத்தில் குண்டுவெடிப்பு

## 9 பேர் பலி



(புதுடில்லி)

டில்லி உயர்நீதிமன்றத்தின் 5 ஆம் வாயிலில் நேற்று காலை 10.17 மணியளவில் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. இதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். 45 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ராம்மனோகர் லோகியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் தீயணைப்புத் துறையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை என்பதால் நீதிமன்றத்துக்கு ஏராளமானோர் வந்திருந்த நிலையில் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

9 பேர் உயிரிழந்ததை உள்நாட்டு பாதுகாப்பு துறைச் செயலர் யுகே பன்சால் உறுதிசெய்தார்.

அதிக பாதுகாப்பு மிகுந்த இந்தப் பகுதியில் நன்கு திட்டமிட்டே இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்தப்பட்டுள்ளது என்றார் அவர். குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தில் தேசிய பாதுகாப்பு படையினரும் தேசிய புலனாய்வு அமைப்பினரும் ஆய்வு செய்து வருகின்றனர்.

குண்டுவெடிப்பில் அம்மோனியம் நைத்ரேட் பயன்படுத்தப்பட்டுள்ளது என தேசிய பாதுகாப்பு படையின் இயக்குநர் ஜெனரல் தெரிவித்தார்.

டில்லி உயர்நீதிமன்றத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பை தொடர்ந்து நாடு முழுவதும் உசார் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# எம்.பிக்களுக்கு இலஞ்சப்பணம் வழங்கிய குற்றச்சாட்டில் அமர்சிங் கைது

(புதுடில்லி)

பாராளுமன்றத்தில் நடந்த மத்திய அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க பாரதிய ஜனதா எம்.பிக்களுக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் சமாஜ்வாடி கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் அமர்சிங் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் பா.ஜ.க. முன்னாள் எம்.பிக்கள் இருவரும் கைதாகியுள்ளனர்.

அமெரிக்கவுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டதை எதிர்த்து மன்மோகன் சிங் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை இடதுசாரி கட்சிகள் கடந்த 2008 இல் வாபஸ் பெற்றன. இதைத் தொடர்ந்து பாராளுமன்றில் கடந்த 2008 ஜுலை 22 ஆம் திகதி நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற பா.ஜ எம்.பிக்களுக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டது.

இலஞ்சம் கொடுக்கப்பட்ட ஒருகோடி ரூபாய் பணம் நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதம் நடக்கும் போதே அனைத்து எம்.பிக்கள் முன்னிலையில் வைக்கப்பட்டது. இதை தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்த போது மக்கள் அதிர்ந்து போகினர். நாடு முழுவதும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இதையடுத்து டில்லி பொலிஸார் சமாஜ்வாடி கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் அமர்சிங், இவரது உதவியாளர் சஞ்சீவ் சக்சேனா, அத்வானியின் முன்னாள் உதவியாளர் சுசீந்திர குல்கானி, முன்னாள் எம்.பிக்கள் பகன்சிங் குலாஸ்தி, அசோக் அர்கல் மற்றும் மகாவீர்சிங் பக்கோரா, சுகைல் ஹிந்துஸ்தானி ஆகியோர் மீது குற்றச்சாட்டுக்களை பதிவு செய்தனர்.

ஏற்கனவே அமர்சிங்கின் உதவியாளர் சஞ்சீவ் சக்சேனாவுக்கு பா.ஜ. இளைஞர் அணி பிரமுகர் சோகைல் ஹிந்துஸ்தானியும் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ஊழல் தடுப்பு சட்டத்தில் அமர்சிங் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். (ஸ்ரீ-2)

# கின்னஸ் சாதனை கவியரங்கம்

கின்னஸ் சாதனைக்காக 1001 கவிஞர்கள் பங்கேற்கும் 72 மணிநேர தொடர் கவியரங்கம் நடக்கவுள்ளது. கோவை தமிழ்ச் சங்கம், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை அரிமா சங்கம் ஆகியவை இணைந்து தமிழக கவிதையை வளர்க்கும் நோக்கத்தோடு கின்னஸ் சாதனை கவியரங்கம் நடத்த உள்ளனர்.


இதில் 1001 கவிஞர்கள் தொடர்ந்து 72 மணிநேரம் கவிதைகள் வாசிக்க உள்ளனர். ஒக்டோபர் முதல் வாரத்தில் கற்பகம் பல்கலைக்கழக அரங்கில் நடக்க இருக்கும் இந்த கவியரங்கத்தில் பங்கேற்றும் கவிஞர்களுக்கு கின்னஸ் சாதனைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

கோவை தமிழச் சங்கத்தலைவர் கவிஞர் மானூர் புகழேந்தி கூறியதாவது, தமிழ் படைப்பிலக்கியத்தில் கவிதைக்கென்று தனித்த இடமுண்டு. நம்முடைய பழம்பெரும் இலக்கியங்கள் எல்லாமே கவிதை நடையில்தான் எழுதப்பட்டுள்ளன. கவிதைகளின்மேல் எல்லோருக்கும் ரசனையும் ஈர்ப்பும் இருந்தது. ஆனால், இன்றைக்கு காலச்சூழலும் கல்விச் சூழலும் மாறிப்போனதால் கவிதை எழுதுபவர்கள் எண்ணிக்கையும் கவிதை வாசிப்பவர்கள் எண்ணிக்கையும் குறைந்து வருகின்றன.

கவிஞர்கள் மத்தியிலும் இளைஞர்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள இந்த தேக்கத்தைப் போக்கி தொடர்ந்து கவிதை எழுதும் எண்ணத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக இந்த கின்னஸ் சாதனை கவியரங்கத்தை நடத்துகிறோம். இதில் மூத்த கவிஞர்கள், இளங்கவிஞர்கள், கல்லூரி மாணவ மாணவியர் என அனைவரும் பங்கேற்கலாம். இவ்வாறு புகழேந்தி கூறினார். (ஸ்ரீ-2)

# இந்தியாவை ஆள்வது யாரென்பதை தமிழக முதல்வரே தீர்மானிப்பார்

## சீமான் தெரிவிப்பு



இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் இந்தியாவில் பொதுத் தேர்தல் வரப்போகிறது. அந்த தேர்தலுக்குப் பின்னர் இந்தியாவை யார் ஆள்வது என்பதை முதல்வர் ஜெயலலிதா தீர்மானிப்பார் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் கூறினார்.

ஆற்காட்டில் நேற்று முன்தினம் இரவு நடந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் நாம் தமிழர் தலைவர் சீமான் உரையாற்றினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

பேறறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பையாஸ், ரவிச்சந்திரன் இவர்களின் விடுதலையே தமிழினத்தின் விடுதலை. அதற்காகத்தான் போராடுகிறோம். இவர்கள் விடுதலை அடைந்தால் ஈழத் தமிழினமே விடுதலை அடைந்ததாக அர்த்தம். இவர்களுக்கான போராட்டத்தில் நாம் எப்போதும் உள்ளோம்.

கடந்த ஆட்சிகளில் ஒன்றரை ஆண்டுகளில் ஐந்துமுறை என்னை கைது செய்தார்கள். சட்டத்தை மதிப்பவன் நான் ஆகையால் கைதுக்கு பயப்படாமல் கைதானேன். பொலிஸார் அழைத்துச் சென்ற இடத்திற்கெல்லாம் சென்றேன். நீட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போட்டேன்.

தற்போது நடைபயணத்தை நிறுத்துங்கள் என்றார்கள். சட்டத்தை மதிப்பவன் நான். அதனால்தான் பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க போராட்டத்தை கைவிட்டேன்.

ஆனால், இலட்சியத்தையோ, நோக்கத்தையோ கைவிடவில்லை. இன்னும் ஒன்றரை ஆண்டுகளில் தேர்தல் வரப்போகிறது. பாதி இந்தியாவில் காங்கிரஸுக்கு எந்த ஒரு சீட்டும் கிடைக்காமல் அன்னா ஹசாரே காலி பண்ணிவிடுவார். தென்னிந்திய காங்கிரஸ் கட்சியை நான் காலி செய்துவிடுவேன்.

இந்தியாவை ஆளப்போவது யார் என்பதை எங்கள் முதல்வர்தான் தீர்மானிக்கப்போகிறார். முதல்வரே, நீங்கள் கவலைப் படாதீர்கள். தென்னிந்தியா முழுவதும் சுற்றி வெற்றிக் கனியை பறித்து வந்து எங்கள் காலடியில் நானும் தம்பிமார்களும் சமர்ப்பிக்கிறோம். இந்த மூவரின் விடுதலை முதவரின் கையில் தான் உள்ளது. அற்புதம்மாளின் கண்ணீரை முதல்வர்தான் துடைக்கவேண்டும் என்று பேசினேன். அவர் ஒரு கண்ணில் விழுந்த நீரைத் துடைத்துவிட்டார். இன்னொரு கண்ணின் நீரையும் முதல்வர் துடைப்பார் என நம்புகிறேன். நீங்களும் நம்புங்கள் என்றார் சீமான். (ஸ்ரீ-2)

# அமைச்சர் சொன்ன குட்டிக் கதைக்கு தி.மு.க. உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு

## சபையிலிருந்து கூண்டோடு வெளியேற்றம்

சட்டசபையில் நேற்று முன்தினம் பேராசையால் ஏற்படும் விளைவு குறித்து அமைச்சர் சுப்பிரமணியம் சொன்ன குட்டிக்கதைக்கு தி.மு.க. உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் சபையில் கடும் அமளி, கூச்சல், குழப்பம் நிலவியது. அமைச்சரின் கதைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேச முயன்ற தி.மு.க. உறுப்பினர்கள் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர்.

சட்டசபையில் நேற்று முன்தினம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சுப்பிரமணியம் தனது துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதில் அளித்தார். அப்போது பேராசையின் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது குறித்து கதை ஒன்றை கூறினார்.


ஒரு விவசாயி தான் வசதியோடு வாழ வேண் டும் என்று நினைத்து கடவுளிடம் போய் வரம் கேட்டிருக்கிறான். அந்தக் கடவுள் ஒரு இரும்பு மண்வெட்டியை கொடுத்து இது விசேசமா னது. இதைப் பயன்படுத்திக் கொள் என்றான்.

உடனே அந்த விவசாயி தனக்கு சொந்தமான நிலத்திற்கு வந்து அந்த இரும்பு மண்வெட்டியால் வெட்டினான். அவன் வெட்ட வெட்ட அந்த நிலத்தில் இரும்பாக வந்தது. உடனே அதை விற்று கொஞ்சம் வசதியாக வாழ்ந்தான்.

மேலும் வசதியாக வாழ வேண்டும் என்ற ஆசையோடு திரும்ப கடவுளிடம் சென்று வேண்டினான். உடனே கடவுள் அவனுக்கு ஒரு வெள்ளி மண்வெட்டியைக் கொடுத்தார். அதை வாங்கி வந்து நிலத்தில் வெட்டினான். வெள்ளிக்கட்டிகளாக வந்தது. அதை விற்று மேலும் வசதியோடு வாழ்ந்தான்.

அதிலும் நிறைவடையாமல் அவனுக்கு பேராசை ஏற்பட்டு மறுபடியும் கடவுளிடம் போய் வேண்டினான். கடவுள் அப்போது அவனுக்கு ஒரு தங்க மண்வெட்டியை கொடுத்தார். தங்க மண்வெட்டியை எடுத்து வந்து ஆசையோடு நிலத்திற்கு வந்து மண்ணை வெட்டினான். வெட்ட வெட்ட மண்ணாக வந்தது. மிக ஆழ்த்திற்கு போய் பார்த்தான். அந்த குவிந்திருந்த மண்ணெல்லாம் அந்த குழிக்குள் விழுந்து அவனை அமுக்கி அதில் இறந்து போனான். பேராசையினால் அவனுக்கு இத்தகைய நிலைமை ஏற்பட்டது.

அந்த இரும்பு மண்வெட்டிதான் ஸ்டாலின். வெள்ளி மண்வெட்டிதான் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி. அந்த தங்க மண்வெட்டி



தான் திகார் சிறையில் இருக்கின்ற கனிமொழி.

இவ்வாறு அமைச்சர் கதையைக்கூறி முடித்ததும் தி.மு.க. தரப்பில் தங்கம் தென்னரசு எழுந்து ஆட்சேபனை தெரிவித்தார். உடனே தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இந்தக் கதையை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று குரலெழுப்பினார்கள்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த சபாநாயகர் ஜெயக்குமார், பேராசையின் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதற்கு உதாரணமாகத்தான் அந்தக் கதையை அமைச்சர் சொன்னார். அதை நீக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறினார். இதை ஏற்க மறுத்த தி.மு.க. உறுப்பினர்கள் உரத்துக்குரல் எழுப்பியவாறே நின்று கொண்டிருந்ததால் அவர்கள் அனைவரையும் வெளியேற்றுமாறு சபாநாயகர் ஜெயக்குமார் உத்தரவிட தி.மு.க. உறுப்பினர்கள் அவையி லிருந்து வெளியேறினர். (ஸ்ரீ-2)

# வடமாகாண சிறந்த நூற்பரிசு தேர்வு முடிவுகள் – 2010

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாண தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், வருடாவருடம் சிறந்த நூற் பரிசுத்தேர்வினைநடாத்திவருகின்றது.

அந்த வகையில் 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு போட்டிக் கெனத் திணைக்களத்திற்கு கிடைக் கப்பெற்ற நூல்களில் துறை ரீதி யாகத் தெரிவு செய்யப்பட்ட நூல் களும், ஆசிரியர்களின் விபரமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் 2010 ஆம் ஆண்டு வெளி வந்த நூல்களில் ஒவ்வொரு துறை யிலும் சிறந்த நூலாக தெரிவு செய் யப்பட்டு பரிசு பெறும் நூல்களின் விபரம் வருமாறு,

சிறுகதை- முக்கூடல் (க.சட்ட நாதன்,யாழ்ப்பாணம்)

நாவல்- வாசாப்பு (எஸ். ஏ.உத யன்,மன்னார்)

கவிதை- கடந்து போதல் (நீ.பி. அருளானந்தம்,மவுண்லவனியா)

சிறுவர் இலக்கியம் - பாலன் வருகின்றான் (கலாபூஷணம் சு.துரை சிங்கம்,வெள்ளவத்தை)

ஆய்வு இலக்கியம் – ஈழத்து கலை இலக்கிய உலகு விமர்சனக் கட்டு ரைகள் (கலாநிதி. கந்தையா ஸ்ரீக ணேசன்,வவுனியா)

நாடகம்- வட்டுக்கோட்டைக் கூத் தும் கிராமியக் கலைகளும் (கந் தையா நாகப்பு, வட்டுக்கோட்டை)

பல்துறை சமயம் – திருவருட் கதை கள் (கே.வி.குணசேகரம், கோப்பாய்)

பல்துறை வரலாறு- நெடுந்தீவு சிதையும் சின்னங்கள் (நா. இலட்சு மணராசா, திருநெல்வேலி)

பல்துறை பொது- ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல் (அருட் திரு. இராஜேந்திரம், திருநெல் வேலி). (ஸ்ரீ-2)

# மர்ம மனிதன் தாக்கியதில் இளைஞன் ஒருவன் காயம்

## ஏழாலை மேற்கில் சம்பவம்

(சுன்னாகம்)

ஏழாலை மேற்கு பகுதியில் மர்ம மனிதன் தாக்கியதில் ஒருவர் காயம டைந்த நிலையில் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருதாவது, ஏழாலை மேற்கு பகுதி யினுள் வீட்டு வளவினுள் புகுந்து ஒளிந்திருந்த இரு மர்ம மனிதர்கள் அவ்வீட்டிலுள்ள இளைஞன்வெளியே வந்த சமயம் அவரை கடுமையாக தாக்கியுள்ளார்.

இதில்நெஞ்சிலும்,கைகளிலும்வெட் டப்பட்ட நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கூக்குரல் எழுப் பவே மர்ம மனிதர்கள் தப்பிச் சென் றுள்ளனர். இம் மர்மனிதர்கள் நின்ற இடங்களில் கிறிஸ் கசிந்தும் காணப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஞானேஸ்வரன் நவீனன் (வயது-18) என்பவரே காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார். (ஸ்ரீ-6-12-54)

# சிறுமி துஷ்பிரயோகச் சம்பவம் குறித்து பாராளுமன்றத்தில் வாதப்பிரதிவாதம்

(கொழும்பு)

மாத்தறைக் கல்விக்கோட்டத்திற்கு உட் பட்ட பரீட்சைகள் இணை ப்பு நிலையம் இயங்கி வந்த பாட சாலை வளவில் சிறுமியொருவர் துஷ்பிரயோகத்திற்கு இலக்கான சம்பவம் குறித்து பாராளுமன்ற த்தில் நேற்றையதினம் வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் புத்திக பத்தி ரண இது தொடர்பாக சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த இந்தச் சம்பவத் துடன் தொடர்புடையவர் களுக்கு எதிராக தராதரம் பாராது நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக கல்வி யமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் தார்.

இதேவேளை, குச்சவெளி பிர தேசத்தில் விலைமனுக்கோரல் மூல மாக காணிகள் வழங்கப்பட்டுள் ளன என்று ஜனநாயக தேசி யக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பி னர் அநுரகுமார திஸாநாயக்க வினவினார்.

நாட்டு மக்களுக்குச் சொந்த மான காணி களை விலைமனுக் கோரல் மூலம் தெரிவு செய்ய வேண்டுமென அவர் சபையில் குறிப் பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பொருளாதார அபி விருத்தி பிரதியரமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபே வர்த்தன விலைமனு கோரப் பட்ட போதிலும் அவற்றிற்கு உரி யவர்கள் வருகை தரவி ல்லை என்று கூறுகிறார். (ஸ்ரீ-2)

# கண்ணீர்அஞ்சலியும், ஆண்டு நிறைவுவிழா இடைநிறுத்தமும்



எமது நிறுவனத்தின் நிர்வாகசபை உறுப்பினரும், ஆயுட்கால அங்கத்தவரும், மகத்தான சேவையாளனுமான அமரர் கே.எஸ். துரைரத்தினம் (சாந்தன்) அவர்கள் 04.09.2011 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தவர். அன்னாரின் சேவை கள், செயற்பாடுகள், அர்ப்பணிப்புக்கள் எம்மை ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது.

அன்னார் சிந்திய வியர்வைத் துளிகள், இரவு பகல் பாராது விழிதூங்காது செய்தசெயல்கள் எத்தனையோ அத்தனைக்கும் நாம் இரங்குகின்றோம். அன்னாரின் சேவைகள் அனைத்தையும் எமது நிலையம் என்று நன்றியுடன் நினைவுகூறும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது மாற்று வலுவுடையோர்கள் சமூகம் சார்பில் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

மேற்படி எமது நிறுவனத்தின் முக்கிய பங்காளியான கே.எஸ்.துரைரத்தினம் அவர்களின் மறைவால் எமது நிறுவனத்தின் 10.09.2011ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த 21ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளது என்பதை சகல போட்டியாளர்கள், கலை நிகழ்வுகளிற்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் மாற்று வலுவுடையோர்கள், மாற்றுவலுவுடையோர் நிறுவனங்கள், கொடையாளர்கள், சமூகத் தொண்டர் கள் பெரியோர்கள் மற்றும் சக மாற்று ஆற்றலுடையோர்கள் அனைவரிற்கும் அறியத்தருகின்றோம்.

வலுவிழந்தோர் சேவையில்

வைத்திய கலாநிதி ந.சிவராஜா, தலைவர்–AROD

(சி-4351)

# தேசியமட்ட விளையாட்டுப்போட்டி

(கரவெட்டி)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8 மணிக்கு பண்டாரவளை நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாண அணிசார்பாக வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி 15,17 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளனர்.

இதில் 15 வயதுப் பிரிவினர் கொழும்பு நியூசியஸ் கல்லூரி அணியுடனும், 17 வயதுப் பிரிவினர் சப்பிரகமுவா மாகாண பின்னவெல மத்திய மகாவித்தியாலய அணியுடனும் மோதவுள்ளனர்.

(ஸ்ரீ-12-24)

# மீளெழுச்சித்திட்ட அபிவிருத்திக் கூட்டம்

(அச்சுவேலி)

புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் நியாப் மீள் எழுச்சித்திட்ட அபி விருத்திக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறும்.

எனவே, இதில் அப்பகுதி மக்களை கலந்து கொள்ளுமாறு கிராம அலுவலர் எஸ். அலோசியஸ் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-12-70)

# வணிகமாணிப்பட்டம் பெறுவோர் விபரம் வெளியீடு


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சை கள் அலகினால் நடத்தப்பட்ட வணிகமாணி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து வணிகமாணிப் பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகி யுள்ளது.

இம்முறை 52 மாணவர்கள் வணிக மாணிப்பட்டம் பெறுவதுடன் இவர்களில் ஒரு மாணவர் இரண்டாம் தரம் மேற்பிரிவிலும் 51மாணவர் கள் சாதாரண சித்தியிலும் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியுமென வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் க. சிவராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# மரண அறிவித்தல்

## ஆழ்வான் சின்னக்கிளி



அண்ணா வீதி,பாலாவியை பிறப்பிட மாகவும் நாவற்குழி செல்வநகரை வசிப் பிடமாகவும், தற்போது மீசாலை மேற்கு வாகையடி மீசாலையை வசிப்பிடமாக வும் கொண்ட ஆழ்வான் சின்னக்கிளி 07.09.2011 புதன்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வான் சவரி ஆகியோரின் மகனும், பூரணம் (அமரர்), மரிசை (அமரர்) சீனியர், வைத்தியாம்பிள்ளை( அமரர்), ஆகி யோரின் அன்புச் சகோதரனும், அன்னப் பிள்ளையின் அன்புக் கணவரும் தியாக ராசா (அமரர்), ஈஸ்வரி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி (இத்தாலி), நாகராஜா (இத் தாலி), நாகேஸ்வரி(டென்மார்க்), ஜெகதீஸ்வரி (பிரா ன்ஸ்), கமலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரூபன்(கனடா), கண்ணன் (அமரர்), பொபி தர்சிகா(லண்டன்), டலக்சன், சிந்துஜா (பிரான்ஸ்), மதுசா(டென்மார்க்), விதுஷன்(இத்தாலி), விபித்தன் (இத்தாலி), சீனு (ஜேர்மனி), அபி (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு பேரனும், பாலரஞ்சனா (அமரர்), குலேந்திரன் (அமரர்), தவபாலசிங்கம் (அமரர்), இரட் ணராசா (இத்தாலி), யோகராசா (டென்மார்க்), சிவ நேசன் (பிரான்ஸ்), சாந்தினி, தர்மசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 08.09.2011 வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப.2 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
வாகையடி,
மீசாலை.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6080)

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப்படும் போது தன் முடிவை மாற் றிக் கொள்ளத் தெரிந்தவன். -டாக்டர் ஜான்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# புதிய தமிழ் அரசியல் தலைமை தாயகத்தில் தேவை

ஈழத் தமிழினத்தின் மீது பற்றுக்கொண்ட புலம்பெயர் சகோதரங்களுக்கு அன்பு வணக்கம்.

நீண்டகாலமாக கடிதம் எழுதும் அவா. சந்தர்ப் பங்களும் சூழ்நிலைகளும் நம் விருப்புக்கு தடை விதித்தன.

இருந்தும் தற்போதைய சூழ்நிலையில் இக் கடிதத்தை எழுதாமல் விடுவது வரலாற்றுத் தவ றாகிவிடும் என்ற அடிப்படையில் கடிதம் எழுதத் துணிந்தோம்.

தமிழினத்தின் இழப்புகள், தோல்விகள், துன்பங்கள் என்ற நெடுந்துயரின் வெறுப்புத் தனங்கள் தமிழ் மக்களின் வாழ்வுக்கே பங்கம் விளைவிப்பதாக இருக்கின்ற இவ்வேளையில்,

தங்கள் முயற்சிகள் சர்வதேச சமூகத்துடன் கொண்டுள்ள தொடர்புகள் , தென் சூடான் எங்கள் மீது காட்டும் கரிசனை என்பன மன ஆறுதலைத் தருவதாக இருக்கின்றது.

நீங்கள் சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின் றீர்கள் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இருந்தும் உங்கள் முயற்சிகளுக்கு மௌன மாக உரிமை கோரும் தமிழ் அரசியல் தலைமை களும் இங்கு இருக்கின்றன என்ற செய்தியை நீங்கள் அறியாதிருக்க முடியாது.

என்ன செய்வது! திருமண வீட்டில் சமைய லில் ஈடுபடுவோர் விழித்து நெருப்புக் காய்ந்து சமைத்து வைக்க, பட்டு வேட்டியோடு வருகின்றவர் சபை வைக்கும் பண்பாட்டை எப்படி இல்லாது செய்ய முடியாதோ? அது போலத்தான் உங்கள் கடும் முயற்சிகளின் விளைவுகளுக்கு இங்கி ருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் உரிமை கோரு வதை தடுக்க முடியவில்லை.

பரவாயில்லை. தமிழினத்தின் துயர் அறுக்கும் பணியில், இந்தப் பச்சோந்திகள் மகிழ மரத்திலா, அரச மரத்திலா சீவியம் நடத்துகின்றன என்பதை ஆராய்வது நேர விரயம் என்பதால் அதனை அப்படியே விட்டு விடலாம்.

ஆனால் ஒரு விடயத்தில் நீங்கள் விடும் மகா தவறு பற்றி பிரஸ்தாபிக்கவே இக்கடிதத்தை வரைய முற்பட்டோம்.

சர்வதேச ரீதியில் நீங்கள் குறித்த இலக்கு டன் செயற்படும் நிலையில், இலங்கையில் தமிழ்த் தாயகத்தில் பலமான அரசியல் தலைமை இருக்க வேண்டும் என்ற நினைப்பை கொண்டிராமை அல்லது அத்தகையதொரு பலமான அரசியல் தலைமையை உருவாக்க நினைக்காமை மிகப் பெரும் தவறு எனலாம்.


நம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல் தலைமைகள் படுமோசம். அவை வேறோர் நிகழ்ச்சிநிரலுக்கு அமைய இயங்குகின்றன.

தேர்தல் வெற்றி என்பது, மாற்றுத் தெரிவு இல்லாத நிலையில் ஏற்பட்டதொன்றாகும். ஆனால் தமிழ் மக்களின் இன்றைய பரிதாப நிலை பொருத்தமற்ற அரசியல் தலைமை என் பதை அனைவரும் உணர்ந்துள்ளனர்.

அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அந்த அமைப்பில் இருக்கக்கூடிய ஒரு சிலர் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கின்றார்கள் ஆயி னும், தனித் தவில் எடுபடாதல்லவா?

எனவே மிக விரைவில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக விசு வாசமுள்ள தமிழ் அரசியல் தலைமையை உரு வாக்க வேண்டும். இந்த முக்கியமான பணியில் உங்களுக்கும் காத்திரமான பங்குண்டு. நீங்களும் இங்குள்ள தமிழ் அரசியல் தலைமையும் ஒரு கோட்டில் பயணிக்க வேண்டும். அதுவே தமிழினத் தின் அமைதியான வாழ்வுக்கு வழிசமைக்கும்.

# அச்சம், அவலங்களை போக்கி இன்னருள் நல்க தெல்லியூர் துர்க்கை தேரேறி வருகிறாள்



மஹோற்சவ நாயகி துர்க்கை அம் பாளின்

மலரடி போற்றி வணங்குவதும் யாமே

அன்புத் தெய்வம் தேரிலே ஏறி

பவனி வருவதைப் போற்றுவோம் யாமே

எனக் கவிதை புனைந்துள்ளார் சிவத்தமிழ்ச் செல்விஅம்மையார்.

அவர் துர்க்கை அம்பாள் ஆலய சைவாலய பரிபாலனத்தில் 20 ஆண் டுகள் தர்மகர்த்தா சபைத்தலைவராகவும் 32 ஆண்டுகள் நிர்வாகசபைத் தலை வராகவும் 12 ஆண்டுகள் தனாதிகாரி யாகவும் அரும்பெரும் பணியாற்றிய பழுத்த அனுபவம் படைத்தவர். கோவி லின் பூர்வீக சிறப்பை நன்கு அறிந் தவர். இன்றைய எழுச்சிப் பெருநிலை க்கு வித்திட்ட பெருமாட்டி.

துர்க்கை அம்பாளுக்கு மஹோற் சவம் என்றால் கோயிற்பூசைகள், விழா க்கள், அன்னதானப்பணிகள், சுவாமி காவுதல் பணி, மூர்த்திகளை அலங்கரித் தல், திருவீதி துப்புரப் பணி, நீர் இறைப்பு வேலைகள், மின் இணைப்பு வேலை கள் என்பவற்றில் அம்மையாரின் தலைமைத்துவ பண்பைக் காணலாம். திருவீதிகளில் புற்களை நீக்கி வெண் மணல் பரப்பி இருக்கும் காட்சி அம் பாள் வீதிவலம் வரும் போது திருக் கைலாச காட்சியாகவே இருக்கும்.

மேலும் இவ்வாண்டு நடைபெற்ற கும்பாபிஷேக விழாக்களின் போது உள் கோவிலில் உள்ள வட்டவடிவமான 64 தூண்களும் செதுக்கி எண்கோண வடிவமாகி அமைந்திருக்கும் திருப்ப ணிகள் தென் இந்திய சிற்பிகளின் கை வண்ணத்தைக் காட்டுகின்றன.

எங்கும் நிறைந்த திருவருளை வெளி க்கொண்டு வரவே மந்திர, தந்திர, யந்திர பூர்வமாக ஆலயங்கள் ஆகம விதிப்படி எழுப்பப்பட்டன என்று மன உறுதிப்பா ட்டுடன் துர்க்கைஅம்மன் கோயில் நன்கு பரிபாலித்தவர் சிவத்தமிழ் செல்வி அம்மா. எங்கள் நாட்டில் இடம்பெற்ற 30 ஆண்டு கால யுத்த காலங்களில் துர்க்கா சரணம், துர்க்கா சரணம், என அம்பாளைப் போற்றி யும், ஏற்றியும் வழிபட்ட பெருமாட்டி. தேர் விழாவின் தத்துவம் யாம் சகலரும் அறி ந்ததே, நமக்கு ஏற்பட்டுள்ள அச் சங்கள், அவலங்கள் அகற்றி இன்ன ருள் வழங்க தேர்விழாவில் பவனி வரும் துர்க்கை அம்பாளை வழிபாடு செய்வோமாக!

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்றாகும்

கா. சிவபாலன்

# புழல் சிறையிலிருந்து வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார் நளினி

சென்னையில் புழல்சிறையில் அடைக் கப்பட்டிருந்த நளினி திடீரென வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். அவரை பலத்த பாதுகாப்புடன் பொலிஸார் வேலூர் சிறைச்சாலைக்கு கொண்டு சென்றனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, அவரது கணவர் முருகன் மற் றும் சாந்தன் , பேரறிவாளன் ஆகியோ ருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களில் நளினியின் தண்டனை அப்போதைய முதல்வர் கருணாநிதி மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோருடைய பரிந்துரையின் பேரில் ஆயுள் தண்டனையாக மாற்றப் பட்டது. இதையடுத்து கடந்த 20 ஆண் டுகளுக்கு மேலாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் நளினி. சில மாதங் களுக்கு முன்பு அவர் பாதுகாப்பு கருதி புழல் சிறைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலை யில் முருகன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு அவர்க ளைத் தூக்கிலிட திகதி குறிக்கப்பட்டது.

இதனால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த நளினி கணவரைப் பார்க்க அனுமதிக்க வேண்டும் என்று கோரி சிறை அதிகாரிகளிடம் விண்ணப்பித்தார் இது குறித்து அரசின் கருத்தை சிறை அதிகாரிகள் கோரியிருந்தனர்.

இந்நிலையில் அவர் நேற்று வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். (ஸ்ரீ-2)

# மிரிஹான பிரதேசத்தில் இரு குழந்தைகள் கடத்தல்

புலனாய்வுப்பிரிவு பொலிஸார் எனக் கூறி மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொ ன்றுக்குள் கடந்த திங்கட்கிழமை பிரவேசித்த குழுவொன்று ஒரு வயது மற்றும் இரண்டு வயதான குழந்தை களை கடத்திச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து விரை ந்து செயற்பட்ட மிரிஹான பொலிஸார் நுகே கொட நகரில் வைத்து குழந்தை களை கடத்திச் சென்ற வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளனர்.

எனினும் குழந்தைகளை வேறு ஒரு வாக னத்தில் சந்தேக நபர்கள் கடத்திச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். குடும்ப தகராறு காரணமாக இந்தக் குழு குழந்தை கடத்தல் சம்பவம் நடைபெற்றுள்ளதாக ஆரம்ப விசார ணைகளில் தெரிய வந்துள்ளது.

குழந்தைகளின் தந்தையின் திட்டத் திற்கு அமையவே குழந்தைகள் கடத் திச் செல்லப்பட்டுள்ளனர். குறித்த குழந் தைகளின் தந்தை மற்றும் தாய் இருவ ரும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு முடியும் வரை குழந்தைகள் தாய் பராமரிப்பில் இருக்க வேண்டும் என உத்தரவிட்டி ருந்தது.

அத்துடன் குழந்தைகளை பார்க்க தந்தைக்கு நீதிமன்றம் அனுமதி வழங் கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. இந்த பின்னணியில் தந்தை சில நபர் களை வைத்து குழந்தைகளை கடத்தியுள்ள தாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சந்தோஷ வாழ்வருள தருமநெறி காட்டிட தேரேறி வருக

ஆதி பரமேஸ்வரியே அண்டமெல்லாம் காப்பவளே தேரேறி வருக
சோதி வடிவானவளே துன்பமெல்லாம் தீர்ப்பவளே தேரேறி வருக
சஞ்சலங்கள் தீர்த்திட துர்க்கைத்தாயே சுந்தரி தேரேறி வருக
சந்தோஷ வாழ்வருள தருமநெறி காட்டிட தேரேறி வருக
உற்றதுணை எவருமில்லை உனதடியே சரணடைந்தோம் தேரேறிவருக
உளமுருகும் அடியவரை ஊறுபடாதணைத்திட தேரேறி வருக
துர்க்கா துரந்தரியம்மா ஏற்றி போற்றிய தாயே தேரேறி வருக
பொங்கு தெல்லி நகரில் வாழும் துர்க்கையம்மா தேரேறிவருக

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்றாகும்

தொல்புரத்தூர் க. லோகேஸ்வரன்

# வில்லிசைப் பாட்டு

(நல்லூர்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தேர்த்திருவிழா தினத்தன்று இரவு 9 மணிக்கு செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் அச்சுவேலியூர் கிருஷ்ண வில்லிசைக்குழு தம்பி நாதன் தலைமையில் வள்ளி திருக் கல்யாணம் எனும் தலைப்பில் வில் லிசைப் பாட்டு நிகழ்த்தவுள்ளது.

இதில் விரலிசை வேந்தன் பிலிப் யோன் கபாஸ், மணியம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற் கவுள்ளனர். (ஸ்ரீ-12-134)

# சத்திய தரிசனம்



## படித்தால் மட்டும் போதுமா?

✷ குழந்தைகளின் மனம் கள்ளம் கபடம் இல்லாமல் தூய்மையாக இருக்கும். புடலங்காயில் கல்லைக்கட்டினால் வளையாமல் நேராக வளர்வதுபோல பெற்றவர்களும், ஆசிரியர்களும் பிள்ளைகளும் கட்டுப்பாடு என்னும் கல் லைக் கட்டினால் அவர்கள் நேர்வழியில் நடப்பார்கள்.

✷ கோடரியால் சந்தனமரத்தை வெட்டும்போது கோடாரிக்கும் சந்தன வாசனை வந்துவிடும். அதுபோல பிறர் தமக்கு தீங்கு நினைத்தாலும் கூட நல்லவர்கள் தங்கள் இயல்பை மாற்றிக்கொள்வதில்லை.

✷ இன்றைய பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலும் தாவரங்களிலும் இயல்பைக் கற்கிறார்கள். கணிதத்தில் அல்ஜீப்ரா கணக்குகளைச் செய்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அதை பயன்படுத்த தவறிவிடுகிறார்கள். சாதாரண ஜலதோ சத்திற்கு துளசியைச் சாப்பிடவேண்டும் என்று நினைப்பது கூட இல்லை.

✷ நம் இதய நலத்தில் செய்ய வேண்டிய முதல்பணி அதைச் சுத்தம் செய்து பண்படுத்துவது தான். பின்னர் அன்பெனும் நீர் பாய்ச்சி இறைநாமம் என்னும் விதையை இட்டு வளர்த்துவர வேண்டும். அதில் உண்டாக்கும் பழங்களை உண்டால் வாழ்வு வளம்பெறும்.

# 250 கார்களில் தங்கக்கட்டிகளுடன் கடாபி நைஜருக்கு தப்பியோட்டம்?



(டிரிபோலி)

லிபிய தலைநகர் டிரிபோலிக்கு தெற்கில் உள்ள ஜுப்ரா நகரில் இருந்து 250 கார்களில் தங்கக் கட்டிகள், யூரோ மற்றும் டொலர்கள் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு கடாபி அண்டை நாடான நைஜருக்கு ஓடிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் அவரது செய்தித் தொடர்பாளர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் கடாபி இன்னும் லிபியாவில் தான் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

டிரிபோலிக்குத் தெற்கில் உள்ள பானி வாலித், சபா, ஜுப்ரா, கிழக்கில் உள்ள சிர்ட் ஆகிய நகரங்கள் மட்டும் தற்போது கடாபி ஆதரவாளர்களின் பிடியில் உள்ளது. இங்குள்ளவர்களுடன் இடைக்கால அரசு பேச்சுவார்த்தை நடத்திப் பணிய வைக்க முயன்று வருகின்றது.

**250 கார்களில் தங்கக் கட்டிகள்**

இந்நிலையில் ஜுப்ரா நகரில் இருந்து ஆயுதங்கள் பொருத்தப்பட்ட 250 கார்கள் நேற்று முன்தினம் அதிகாலை புறப்பட்டு அண்டை நாடான நைஜருக்குச் சென்றன. இத்தகவலை பிரான்ஸ் மற்றும் நைஜர் இராணுவ அதிகாரிகள் சிலர் உறுதிப்படுத்தினர்.

இந்த 250 கார்களில் 60 கார்களில் லிபியாவைச் சேர்ந்தவர்களும் பிறவற்றில் நைஜரைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். இக்கார்கள், நைஜரின், அகாடெஸ் நகருக்கு நேற்று முன்தினம் சென்றடைந்ததாகவும் அங்கிருந்து நைஜர் தலைநகர் நியாமே நகருக்கு நேற்று முன்தினம் புறப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து லிபியா இடைக்கால அரசின் அதிகாரி ஒருவர் கூறுகையில்,

அந்தக் கார்களில் தங்கக் கட்டிகள், யூரோ மற்றும் டொலர்கள் ஆகியவை இருந்தன என்றார்.

**கடாபி தப்பியோட்டம்**

கடாபியின் மனைவி சாபியா, மகள் ஆயிஷா, மகன்கள் முகமது மற்றும் ஹானிபல் ஆகியோர் அல்ஜீரியாவில் அடைக்கலம் புகுந்துள்ளனர். மற்ற மகன்களில் சயீப் அல் இஸ்லாம் மற்றும் முட்டாசிம் இருவரும் பானி வாலித் நகரை விட்டு ஓடி விட்டதாகவும் சயீப் அல் அராப் மற்றும் கமீஸ் கடாபி கொல்லப்பட்டதாகவும் இடைக்கால அரசு தெரிவித்துள்ளது. சாடி கடாபி இன்னும் பானி வாலித் நகரில் இருப்பதாக நம்பப்படுகின்றது.

இந்நிலையில் நைஜருக்கு சென்றுள்ள வாகனங்களில் கடாபியும் அவரது உதவியாளர்கள் சிலரும் இருந்திருக்கலாமோ என்று சந்தேகம் எழுந்துள்ளது. நைஜரின் அண்டை நாடான புர்கினோ பாசோ கடாபிக்கு அடைக்கலம் அளிக்க முன்வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**கிளம்பும் சந்தேகங்கள்**

ஆனால் கடாபி அப்படி தப்பினால் அது நேட்டோ படையினருக்குத் தெரியாமல் நடந்திருக்குமா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. இது குறித்து நேட்டோ செய்தித் தொடர்பாளர் ரோலண்ட் லவோய் கூறுகையில்,

லிபியாவில் எங்கள் வேலை மக்களைப் பாதுகாப்பது தானே தவிர யார் யார் எங்கெங்கு ஓடுகிறார்கள் என்று அவர்களை விரட்டிப் பிடிப்பதல்ல என்று தெரிவித்துள்ளார்.

அதேநேரம் ஜுப்ராவில் இருந்து அகாடெசுக்கு சென்ற பாதையை கடாபி எதிர்ப்பாளர்கள் கண்காணிக்காமல் விட்டது ஏன் என்ற மற்றொரு கேள்வியும் எழுகிறது. ஒருவேளை எதிர்ப்பாளர்களே கடாபி தப்பியோடட்டும் என்று விட்டிருக்கலாம் என்று சில நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**லிபியாவில் கடாபி?**

இதற்கிடையில் கடாபியின் செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராகிம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில்,

கடாபி நல்ல உடல்நிலையுடன் உள்ளார். மீண்டும் லிபியாவைக் கைப்பற்றத் திட்டம் தீட்டி வருகின்றார். அவர் இன்னும் லிபியாவில் தான் உள்ளார் என்று கூறியுள்ளார்.

**பேச்சுவார்த்தையில் நிபந்தனைகள்**

பானி வாலித்தை எதிர்ப்பாளர்கள் முற்றுகையிட்டுள்ள நிலையில் அந்நகரில் உள்ள பழங்குடியினத் தலைவர்களுடன் இடைக்கால அரசின் பிரதிநிதி அப்துல்லா கன்ஷில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார். கடாபி ஆதரவாளர்கள் என்பதற்காக எதிர்ப்பாளர்கள் எங்களைப் பழிவாங்கக்கூடாது. எங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கவும் வலியுறுத்தக்கூடாது என இரு நிபந்தனைகளை பழங்குடியினத் தலைவர்கள் விதித்திருப்பதாக கன்ஷில் தெரிவித்தார். (ஸ்ரீ-4)



பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

## யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட யுகொஸ்லாவிய முன்னாள் இராணுவத் தளபதிக்கு 27 வருட சிறைத்தண்டனை



யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றத்திற்காக யுகொஸ்லாவிய முன்னாள் இராணுவத் தளபதிக்கு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மொம்சிலோ பெரிசிக் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பொஸ்னியா மற்றும் குரேஷியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற யுத்தத்தின் போது குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக இராணுவத் தளபதிக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

67 வயதான குறித்த இராணுவத் தளபதி, குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் மீது சித்திரவதைகளை கட்டவிழ்த்து விட்ட தமது கீழ் நிலை அதிகாரிகளுக்கு எதிராக இராணுவத் தளபதி சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி மொம்சிலோ பெரிசி நேரடியாக படுகொலைகளையோ அல்லது வேறு சித்திரவதைகளையோ மேற்கொள்ளவில்லை என்றபோதிலும் தொலைவில் இருந்து சித்திரவதைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




## ஈராக்கில் கொடூரம்

## 8 இராணுவ வீரர்கள் கொன்று எரிப்பு

ஈராக்கில் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசேய்ன் தூக்கிலிடப்பட்ட பின் அங்கு வன்முறை சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் அல்கொய்தா தீவிரவாதிகள் ஈராக் மற்றும் அமெரிக்க வீரர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அன்பார் மாகாணத்தில் உள்ள ஹதிதா-பைஜி ஆகிய நகரங்களுக்கு இடையே இராணுவ சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் இராணுவ வீரர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வாகனத்தில் வந்த துப்பாக்கி ஏந்திய மர்ம மனிதர்கள் சோதனை சாவடியில் இருந்த இராணுவ வீரர்கள் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். அதில் பணியில் இருந்த இராணுவ வீரர்கள் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பின்னர் அவர்களிடம் இருந்த துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை கைப்பற்றினர். மேலும் அவர்களது உடல்களை பெற்றோல் ஊற்றி தீவைத்து எரித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால், பின்லேடன் கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக ஈராக்கில் 100 தாக்குதல்களை நடத்துவோம்.

அந்த தாக்குதல் இம்மாத மத்தியில் தொடங்கப்படும் என அல்கொய்தா தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். எனவே, இந்த தாக்குதலில் அவர்கள்தான் ஈடுபட்டிருக்க வேண்டும் என கருதப்படுகிறது. (ஸ்ரீ-2)

## முபாரக்குக்கு எதிரான விசாரணையில் திருப்பம்

(கெய்ரோ)

எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குக்கு எதிரான விசாரணையில் அரசு தரப்பு சாட்சிகள் எவரும் முபாரக்கை குற்றவாளி என கூறவில்லை. இதனால் விசாரணையில் பெரும் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

போராட்டக்காரர்களுக்கு எதிராக துப்பாக்கிச் சூடு நடத்தும்படி முபாரக் உத்தரவிடவில்லை என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். இது விசாரணையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வழக்கு விசாரணை எதிர்வரும் புதன்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. முபாரக்குக்கு எதிரான சாட்சிகளிடம் முதல் முறையாக நீதிமன்றில் விசாரணை நடத்தப்பட்டது.

உயர் பொலிஸ் அதிகாரி ஹுசைன் சயீத் முர்சி மற்றும் 3 முக்கிய சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தனர். அப்போது போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டது யார் என்று கேட்கப்பட்டது. ஆனால், சாட்சியம் அளித்தவர்கள் எவரும் முபாரக்கை குறிப்பிடவில்லை.

முபாரக் மீதான வழக்கு விசாரணை ஓகஸ்ட் 3 ஆம் திகதி தொடங்கியது. மூன்றாவது முறையாக நடைபெற்றது. சாட்சிகள் எவருமே முபாரக்கை குறிப்பிடாததால் நீதிபதி வழக்கு விசாரணையை எதிர்வரும் புதன் கிழமைக்கு ஒத்திவைத்தார். (ஸ்ரீ-2)

# துளித்துளியாய்...

**மோர்கன் அவுட்**

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரரான மோர்கன் தோள்பட்டை வலி காரணமாக இந்தியாவுக்கு எதிரான மீதமுள்ள போட்டிகளிலிருந்து விலகியுள்ளார்.

**ஆர்ஜென்டினா வெற்றி**

தாகாவில் ஆர்ஜென்டீனா-நைஜீரியா அணிகள் நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியில் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் ஆர்ஜனடீனா 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

**கவுன்டியில் பிங்க் பந்து!**

எதிர்வரும் 12-ம் திகதி இங்கிலாந்திலுள்ள கென்ட-கிலாமோர்கன் கவுன்டி அணிகள் மோதும் கிரிக்கெட் போட்டியை மின்னொளியில் பிங் நிற பந்துகொண்டு நடத்த முடிபு செய்துள்ளனர். பிற்பகல் 2 மணி முதல் இரவு 9 மணி வரை போட்டிகள் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் வெள்ளை நிற உடையுடன் களமிறங்குவர்.

**யூரோ 2012 க்கு இத்தாலி தகுதி**

யூரோ கால்பந்துப் போட்டி அடுத்த ஆண்டு போலந்தில் நடக்கிறது. இதற்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் இத்தாலி 1:0 என்ற கோல்கணக்கில் ஸ்லோவேனியாவை வீழ்த்தியது. இதன்மூலம் இத்தாலி யூரோ கால்பந்தில் விளையாட தகுதிபெற்றுள்ளது.

# குக் பொறுப்பான ஆட்டம் இங்கிலாந்து இலகு வெற்றி



(சௌதம்ப்ரன்)

அணித் தலைவர் குக்கின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 டெஸ்ட், ஒரே ஒரு 'இருபது-20' மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை 0:4 என்ற கணக்கில் கைப்பற்றிய இங்கிலாந்து அணி ஒரே ஒரு 'இருபது-20' போட்டியிலும் வெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக முடிபின்றி கைவிடப்பட்ட நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி சௌதம்ப்ரன் ரோஸ் போலில் நடைபெற்றது. இப்போட்டி மழை காரணமாக தாமதமாக ஆரம்பமானதால் ஆட்டம் இரு அணிகளுக்கும் தலா 23 ஓவர்கள் என மட்டுப்படுத்தப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் குக் முதலில் துடுப்பெடுத்தாட இந்திய அணியை அழைத்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ரகானே, ரெய்னாவின் அதிரடியில் 23 ஓவர்கள் நிறைவில் 187 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரகானே 47 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 54 ஓட்டங்களையும் சுரேஷ் ரெய்னா 19 பந்துகளில் (3 பவுண்ரிகள், 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 40 ஓட்டங்களையும் ராகுல் டிராவிட் 32, பார்திவ் பட்டேல் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரேஸ்னன், சுவான் தலா 3 விக்கெட்டுக்களையும், அன்டர்ஷன் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 23 ஓவர்களில் 188 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு குக்-கீஸ்வேற்றர் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கியது.

இந்நிலையில் இங்கிலாந்து அணி 22.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 188 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் குக் ஆட்மிழக்காமல் 63 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 80 ஓட்டங்களையும் கீஸ்வெற்றர் 25 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸ்சர் உட்பட) 46 ஓட்டங்களையும் இயன்பெல் 25, பொப்ரா 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் வினேய் குமார் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த குக் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

# இன்னர் சிற்றியிடம்...

மூத்த தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் பாலித்த கொஹன்னவின் பங்கு என்னவென்று அவரிடம் இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பிய போது அதுகுறித்து விஜய் நம்பியாரிடம் கேளுங்கள் என அவர் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் விஜய் நம்பியாரிடம் தாம் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கவில்லை என இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

ஆனால் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அப்போதைய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்னவிடம் இதுகுறித்து கேட்குமாறு அவர் கூறியிருந்ததாகவும் இன்னர் சிற்றி பிரஸ் குறிப்பிட்டு காட்டியுள்ளது.

பாலித கொஹன்னவிடம்இது குறித்து கேள்வி எழுப்பியபோது படைத்தரப்புக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறியுள்ளார்.

அத்துடன் விஜய் நம்பியாரை ஒரு நட்சத்திர விடுதியில் தான் சந்தித்துப் பேசியதை ஏற்றுக்கொண்ட பாலித கொஹன்ன, அச் சந்திப்பு குறித்து தனது நினைவில் இல்லை என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீதான எறிகணைத் தாக்குதலில் படைத்தரப்பின் 58ஆவது படைப்பிரிவு தொடர்புபட்டிருந்ததாக நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறித்து சவேந்திர சில்வாவிடம் இன்னர் சிற்றி பிறஸ் கேள்வி எழுப்பியபோது, 58 ஆவது படைப்பிரிவு குறித்து அவ்வறிக்கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என கூறியுள்ளார்.

இந்நிலையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் சிறிலங்கா படைத்தரப்பின் 58வது படைப்பிரிவின் பெயர்கள் குறிப்பிடப்பட்ட பந்தியை இன்னர் சிற்றி பிரஸின் ஊடகவியலாளர் உரத்து வாசித்தார்.

இதையடுத்து இவ்வறிக்கை தவறானது என்றும் அது 53ஆவது படைப்பிரிவு என்றும் 58-வது படைப்பிரிவு அப்போது வேறொரு இடத்தில் இருந்ததாக சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் ஏன் பதிலளிக்கவில்லை என இன்னர் சிற்றி பிரஸ் வினவியபோது அவ்வறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை அல்ல என்று பாலித கொஹன்ன தெரிவித்ததாக இன்னர் சிற்றி பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

# தோல்வியில் முடிபடை...

இந்த அறிக்கையில் மே 17ஆம் திகதி பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ போர் முடிந்து விட்டதாக அறிவித்துள்ளதாகவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை மே 19ஆம் திகதி அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அன்றைய நாள்முழுவதும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம உள்ளிட்ட அதிகாரிகளுடன் தான் தொடர்பில் இருந்ததாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் அதிக எண்ணிக்கையான மக்கள் இன்னமும் இருப்பதாக மன்னார் ஆயர் தன்னிடம் தொடர்பு கொண்டு கூறியதாகவும், பிளேக்கின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் எஞ்சியுள்ள புலிகள் சரணடைய தயாராக இருப்பதாகவும் அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதாக நோர்வே தூதுவர் தன்னிடம் கூறியதாகவும் பிளேக் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

பொது மக்களுக்கு இழப்புக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் எஞ்சியுள்ள போராளிகளை சரணடைவதற்கான நடுநிலையாளர் ஒருவரை ஏற்க வைப்பது தொடர்பாகவே தான் இலங்கை அதிகாரிகளுடன் அன்றைய நாள் முழுவதும் தொடர்பில் இருந்ததாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

மே 17 ஆம் திகதி அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவை நடுநிலையாளராக ஏற்றுக் கொண்டு விடுதலைப்புலிகளை சரணடைவதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமாறு கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து வேண்டுகோள் விடுத்ததாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் போர் முடிந்து விட்டது என்று கூறி கோத்தபாய ராஜபக்ஷ அந்த நடுநிலை முயற்சியை ஏற்க மறுத்துவிட்டதாகவும் ஆனால் சரணடையும் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு படையினருக்கு தான் அறிவுறுத்தியிருப்பதாக அவர் கூறியதாகவும் பிளேக் அனுப்பிய குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை அன்றைய நாள் போர் வலயத்திலிருந்து சடலங்களையும் காயமடைந்தவர்களையும் மீட்க அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவை அனுமதிக்குமாறு ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவைத் தான் கேட்டுக்கொண்டதாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

தனது வேண்டுகோளை நிராகரித்த பசில் ராஜபக்ஷ, அரசாங்கமே அதனைப் பார்த்துக் கொள்ளும் என்று கூறிவிட்டதாகவும் பிளேக் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக விக்கி லீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (எ-1)

# ஜனாதிபதியின் பெயரில் மோசடி; இந்தியப் பிரஜை விடுதலை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவர் என நம்ப வைத்து இலங்கை வர்த்தகர் ஒருவருக்கு குறைந்த வட்டியில் பெருந்தொகைப் பணத்தை கடனாகப் பெறுத் தருவதாகக் கூறி அந்த வர்த்தகரிடமிருந்து 2.5 மில்லியன் ரூபாயை பெற்றுக் கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு இந்தியரை கொழும்பு நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

சந்தேக நபர் இலங்கை வர்த்தகரிடமிருந்து பெற்றுக் கொண்ட 2.5 மில்லியன் ரூபாயினை திருப்பிக் கொடுத்துவிட்டார் எனவும் இவரின் மகன் இந்தியாவில் வீதி விபத்தில் சிக்கி கடுமையாகக் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவரின் சார்பில் வாதாடிய சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்நிலையில் மகனைக் கவனிப்பதற்காக அவர் இந்தியா செல்ல வேண்டும் என்பதால் மேற்படி இந்தியப் பிரஜைக்கு எதிரான குற்றங்களை சமாதானமாகத் தீர்க்க முடியுமெனவும் கூறிய சட்டத்தரணி அவரை விடுதலை செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

சட்டத்தரணியின் வாதங்களைக் கருத்திற் கொண்ட கொழும்பு, கோட்டை நீதவான் லங்கா ஜயரட்ன சந்தேக நபரை விடுதலை செய்தார். அத்துடன் மேற்படி சந்தேக நபர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையையும் நீக்க உத்தர விட்டார். (ச-5)

## தீயணைப்பு சேவை இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்பு வாகனத்தின் திருத்த வேலைகள் பூரணப்படுத்தப்படாமையால் மறு அறிவித்தல் வரை அதனது சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக யாழ் மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் ஒரே ஒரு தீயணைப்பு வாகனமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தேசிய மட்ட சதுரங்க போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட சதுரங்கப்போட்டி இன்று காலை 8.00 மணிக்கு பதுளையில் இடம்பெறவுள்ளது.

இதில் வடமாகாண அணி சார்பாக 15 வயதுப்பிரிவில் வட இந்து மகளிர் கல்லூரி அணியும்,பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ்ரீ-12,24)

## பட்டமளிப்புக்கு செல்லும் மாணவர்களுக்கு !

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு வைபவத்தில் கலந்து பட்டம் பெறவுள்ள யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 11 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் யாழ்ப்பாண உயர்தொழில்நுட்பவியல் மாணவர் சங்க ஏற்பாட்டில் தலைவர் செ.செல்வரதன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது

எனவே யாழ்ப்பாண உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கல்வி கற்று பட்டம் பெறவுள்ள சகல மாணவர்களும் குறித்த நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்க செயலாளர் வி.தயாபரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ச)


தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்,
இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் கணினி பயிற்சி நிலையம்
இல 27 குமாரசுவாமி வீதி, கந்தர்மடம் 021 — 4925334 இல 114 டச்சு வீதி, சாவகச்சேரி
8ஆவது ஆண்டில் சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தில்
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம்
I.Basic Computer Application (2 Month)
(Introduction to Computer ,Ms Word, Ms Excel,Ms PowerPoint, Inetrnet & e-mail) Rs 1000.00 Only
II.Internet & e-mail (10 Hrs) Rs 500.00 Only
பதிவுகளை 09ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
Online Classes


உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



## ரஷ்ய...

குள்ளானதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். யாரோஸ்லாவ் ஐஸ் ஹொக்கி அணியின் அங்கத்தவர்களை ஏற்றிச் சென்ற விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது. இவர்கள் இப்பருவகாலத்தின் முதல்போட்டிக்காக பெலாரசுக்கு சென்றுகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இறந்தவர்களில் எத்தனைபேர் இவ் விளையாட்டு அணியின் அங்கத்தவர்கள் என்ற விபரம் தெரியவில்லை.

விமானத்தின் சிதைவுகள் வெல்கா நதியில் கண்டுபிடிக்கப்பட்டன. இச்சம்பவத்தில் மேலும் இருவர் காணாமல் போயுள்ளதாகவும் விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## அத்தநா...

கறுவாத்தோட்டம் பொலிஸார் கொழும்பு பிரதான நீதவானிடம் நேற்றுத் தெரிவித்தனர். திஸ்ஸ அத்தநாயக்கவின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரான குமார விஜயசிங்க இது விடயமாக முறைப்பாட்டை செய்ததாக கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தரான சார்ஜன் அஜித் மெண்டிஸ் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தபோது கூறினார்.

இப்படியான எச்சரிக்கைகள் ஒரே கையடக்கத் தொலைபேசியிலிருந்து செப்ரம்பர் 3 மற்றும் ஓகஸ்ட் 22 ஆகிய தினங்களில் கிடைக்கப்பெற்றுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளதாக கூறிய மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர், திஸ்ஸ அத்தநாயக்கவின் வாக்கு மூலத்தை பொலிஸார் பதிவு செய்துள்ளதாகவும் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ச-5)

## கைதிகள்...

அதிகாரி ஜெகதிஸ்ஸ ஆகியோருக்கு தெரியவரவே அவர்கள் கைதிகளுடன் சுமுகமாக கலந்துரையாடி பின்னர் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

# மர்ம மனிதன் தொடர்பில் கண்டன தீர்மானம்

கடந்த ஒருமாதத்திற்கும் மேலாகத் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மர்ம மனிதர்களின் பெயரால் தமிழ் மக்கள் மீது உளவியல் யுத்தம் ஒன்று தொடுக்கப்பட்டுள்ளது என புத்தூர் பிரதேச சபை உறுப்பினர்களால் கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மாயாவிகள் போல இரவில் குடியிருப்புக்களில் புகும் நபர்கள் பெண்களைக் குறிவைத்தே தாக்குதலை மேற்கொள்கின்றனர்.

இதன் மூலம் ஆண்களைக் கோபப்படுத்தி வீதிக்கு இழுத்து விட்டு தப்பியோடுகின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்ற இடங்கள் அனைத்திலும் மர்ம நபர்களை துரத்திச் சென்றவர்கள் இராணுவத்தாலும் காவல் துறையாலும் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்களாகிய நாங்கள் வன்மையாக் கண்டிக்கின்றோம் என வலிகாமம் கிழக்கு புத்தூர் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர் என்றுள்ளது. (ச)

## மன்னிப்புச்சபையின்...

சர்வதேச மன்னிப்புச் சபை அது விரும்பும் அறிக்கையை வெளியிட முடியும். இந்த அறிக்கையை நன்கு ஆராய்ந்தபின் நாம் பொருத்தமான வகையில் பதிலளிப்போம் என அவர் கூறினார்.

அதேசமயம், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பேச்சாளராக லக்ஷ்மன் விக்கிரமசிங்க, ஆணைக்குழு சர்வதேச மன்னிப்புச் சபையை சாட்சியமளிக்க அழைத்தபோது மறுத்துவிட்டது. எனவே அதன் அறிக்கை பற்றி நாம் அக்கறைப்பட வேண்டியதில்லை என கூறினார்.

மேலும், சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைக்கு பதில் கூறுவதால் ஆணைக்குழுவின் முக்கிய நோக்கத்திலிருந்து கவனம் கலைக்கப்படும். பல்வேறு அறிக்கைகளுக்கும் பதில் கூறப்போய் எமது முக்கிய கடமையை நாம் தவறவிடக்கூடாது.

மன்னிப்புச் சபையின் செயற்பாடானது அதன் வாண்மை, பொறுப்புக் கூறும்தன்மை ஆகியவற்றைச் செயற்பட வைக்கும் ஊக்கிகள்பற்றி சந்தேகங்களை தோற்றுவிப்பதாகவும் அவர் கூறினார். (ச-5)

## யாழ்ப்பாண பல்...

வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் யாழ். பல்கலைக் கழகத்தில் நீண்டகாலம் ஆற்றிய மகத்தான சேவையை கௌரவித்து இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கப்படுகிறது.

அத்துடன் இரசாயனவியல் பேராசிரியர் திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் யாழ். பல்கலைக்கழகத்தில் நீண்டகால மகத்தான சேவையை கௌரவித்து விஞ்ஞான கலாநிதி பட்டம் வழங்கப்படுகிறது.

மேலும் யாழ். போதனா வைத்தியசாலை யுத்த சூழ்நிலையில் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து சிறந்த மருத்துவ சேவை வழங்கியமையைக் கௌரவித்து வைத்திய கலாநிதி எஸ். ஆனந்தராஜாவுக்கு மருத்துவ கலாநிதி பட்டம் வழங்கப்படுகிறது.

மற்றும் சமூக, சமய பணிகளில் ஈடுபட்டுவரும் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்படுகிறது. (ச-5)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்...

உடைமைகளை இழந்து, உறவுகளை இழந்து, சுயத்தை தொலைத்து அதனிலிருந்து மெல்ல மெல்ல எம் இனம் மீண்டு வரும் இந்த வேளையில் தமிழ் பேசும் மக்கள் மீது இன்னுமொரு அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக் கின்றது.

உலக நாடுகளின் போட்டிகளிற்கும் அவற்றின் தன் நலன் சார்ந்த செயற்பாடுகளிற்கும் மத்தியில் தமிழ் பேசும் மக்களாகிய எங்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அவர்களின் கைகளில் விளையாட்டுப் பொருளாக இருக்கின்றவேளை இந்த மர்ம மனிதர்கள் எங்கள் மக்களின் மேல் ஏறி விளையாடுகின்றார்கள்.

உலகப்பார்வையே எம் மீது படும் இந்த வேளையில் நாங்கள் அடுத்தது என்ன செய்வது என்று சிந்திப்பதற்குள் இன்னுமொரு அடக்குமுறையை நாம் எவ்வாறு எதிர்கொள்வது?

தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் பிறப்பில் இருந்து பல்வேறுவகையான அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருகின்றோம்.

அவற்றில் காலத்திற்கு காலம் வடிவங்களில் மாத்திரமே மாற்றம் காண்கிறோம்.

எனினும் அவற்றை எல்லாம் துணிவோடு எதிர்கொண்டோம். ஆனால் இன்று போர் முடிபுற்றதாக கூறப்படும் நிலையிலும் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளிற்கு தீர்வு காணப்படவேண்டிய நிலையில் தமிழ் பேசும் மக்களால் என்றும் ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் இன்னுமொரு அடக்கு முறை பிரயோகிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

பெண்களை எம் தேசத்தின் கண்களாக காண்பவர்கள் நாம். இவர்கள் தமிழ்பேசும் மக்களின் இழக்கமுடியாத அளப்பெரிய சொத்து. இத்தாய்மை இனத்தின் மீது எத்தனையோ வகையான வன்முறைகளை கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுவந்தமையை தாங்கள் அறிவீர்கள்.

அவர்களின் வாழ்க்கை சிதைக்கப்பட்டு வேரோடு அழிக்கப்பட்டன. இன்று கொடிய போர் தந்த பரிசால் எங்கள் தாய்மை இனம் வேலியில்லாத காணிக்குள்ளும், கதவுகள் இல்லா வீட்டிற்குள்ளும் கணவனை இழந்து கண்ணீரோடும் வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டு அல்லுற்று சொல்லொணா துயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் இவ் வருத்தம் தோய்ந்த வேளையில் மர்ம மனிதன் என்ற போர்வையில் மீண்டுமொரு வன்முறை தாண்டவமாடதும் ஒருவேளை சோற்றுக்காக தினமும் அல்லறும் எம் தாய்மையினமும் ஆதரவில்லா குழந்தைகளும் வீட்டு மூலைக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

யார் இந்த மர்ம மனிதர்கள்? இவர்கள் தமிழ் மக்களிடம் இதற்கு மேலும் எதை எதிர் பார்க்கின்றார்கள்.

எம்மை அடிமைகளாக்க எண்ணும் காரணம் என்ன? நாம் உணர்ச்சி மிக்கவர்கள் தான். ஆனால் உணர்வு பூர்வமானவர்கள். உலகில் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள். அல்ல அப்படியிருக்கையில் ஏன் எம் மீது இத்தனை அடக்குமுறைகள்? ஒரு நாட்டில் பல்வேறு மொழிகளை பேசும் இனங்கள் வாழலாம். ஆனால் அந் நாட்டில் உள்ள சட்டங்கள் சகல மொழிபேசும் மக்களிற்கும் பொதுவானதே. ஆனால் இங்கு மட்டும் சட்டங்கள் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இயற்றப்பட்டு அது இங்கு வாழும் மக்கள் மீது வெவ்வேறாக பிரயோகிக்கப்படுவதை சர்வதேச சமூகத்திற்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். உலக நாடுகளே ஒரு கணம் நின்று சிந்தியுங்கள் என்றுள்ளது. (ச-6)


A/L எழுதிய மாணவர்களுக்கான
MyWay இன் ENGLISH WORKSHOP
08.09.2011 வியாழக்கிழமை (இன்று)
பிரிவு 1: காலை 8.00-10.30 பிரிவு 2: காலை 11.00-1.30
பிரிவு 3: மாலை 3.00-5.30
ஆங்கிலம் கதைக்க தேவையான அனைத்து விடயங்களும் முழுமையாக கற்பிக்கப்படும்
அனுமதி இலவசம்
கற்கைநெறி புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்.
குளிர்பானம், சிற்றுண்டி வழங்கப்படும்
MyWay 182, Stanley Road, Jaffna 077 33 63 456

வசந்தம் நெற்சோன்
M.M.V. Road Nelliady
அனைத்து விதமான போட்டோ கொப்பி இயந்திரங்கள், பிறிண்டர்களுக்கான தரமான டோனர் (Toner - Eop Japan) வகைகளை நியாயமான விலையில் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
T.P :- 021 226 3105
0777 563 239
(சி-4354)

பதிவுகள் நடைபெறுகிறது NIBM
Certificate in Compueter Science
Certificate in English Language
&
Management Courses
அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்
Weekday Batches 19-09-2011 & Weekend Batches 17-09-2011
077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna

G.A.Q 2012 பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
FIRST EXAMINATION IN ARTS 2012
* மேற்படி பல்கலைக் கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் மூன்று பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
* புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
குறிப்பு :- 01. பதிவுகள் முடிவுத் திகதி 20.09.2011
02. G.A.Q 2011ஆம் ஆண்டிற்கான பரீட்சை விண்ணப்ப படிவம் பெறுவதற்கு பெயர் தந்த மாணவர்களுக்கான விண்ணப்ப படிவங்களைகாரியாலயத்தில் பெற்றுபரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
விபரங்களுக்கு S.அருள்நங்கை (நிர்வாகி) புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-4355)

After A/L?
Government Schol.
CIMA-UK Per Level Rs.14,400 Batch I : Sat 7.30-2PM Batch ii : Sun 2-5.30PM Batch III : Mon- Fri 9 AM- 2 PM
Engineering-USA 80% off Batch i : Sat & Sun 10 - 12PM Batch ii : Sat & Sun 4 - 6PM Batch iii : Mon- Fri 8 AM -10 AM
BIT University of Colombo-ucsc Per year Rs.20,000 (Sem 1 & 2) Batch I : Sat & Sun 8 - 12PM Batch ii : Sat & Sun 2 - 6PM Batch iii : Mon- Fri 4.30-5.30 PM
Multimedia_USA
FIT University of Colombo-ucsc Rs.10,000 cff
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
Free Course fee : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA , Oracle Java, ICDL,
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்

MCS Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction,Jaffna. www.mcsitcampus.org
Diploma Courses.. Free Course fee* *MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English
கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் மற்றைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.